பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 228

ஞாயிற்றுக்கிழமை
13 ஜுலை 2025

ஆனி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## மயங்கி வீழ்ந்து முதியவர் பலி!

யாழ்., ஜூலை 13
வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.
செல்லத்தம்பி தருமராசா (வயது-79) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். உயிரிழந்த 15



# நெடுந்தீவில் மூழ்கியது சுற்றுலாவிகளின் படகு!

### 14 பேர் அருந்தப்பு
### தவிர்க்கப்பட்டது பெரும் அசம்பாவிதம்
### மீட்புக் குழுவுக்குப் பலரும் பாராட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 13**

**நெடுந்தீவு கடற்பரப்பில், தென்னிலங்கையைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த சிறியரகப் படகு திடீரென நடுக்கடலில் மூழ்கியுள்ளது. தெய்வாதீனமாக அந்தப் பகுதியால் பிறிதொரு படகு பயணித்ததால், மூழ்கிய படகிலிருந்து எழுப்பப்பட்ட சமிக்ஞையை அவதானித்து படகிலிருந்த 14 பேரும் நூலிழையில் மீட்கப்பட்டனர்.** 15

## மரண தண்டனையை உடன் அமுல்படுத்துக

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி கோரிக்கை



கொழும்பு, ஜூலை 13
நாட்டில் போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட குற்றங்கள் குறையவேண்டுமென்றால், மரண தண்டனையை அமுல்படுத்த வேண்டும் என்று 15

### ஐந்து ஆண்டுகளின் பின்னர்

## அரசாங்க சேவையில் 30,000 பேர் நியமனம்

கொழும்பு, ஜூலை 13
5 ஆண்டுகளுக்குப் பின்னர் அரச சேவைக்குப் புதிதாக 30 ஆயிரம் பேரைச் சேர்க்க திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
அம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள் 15



## அரசியற்கைதிகளை விடுவிக்க ஒரு குவளைத் தண்ணீர்!

### திருநெல்வேலியில் நூதனப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 13
அனைத்துத் தமிழ் அரசியற்கைதிகளையும் விடுவிக்குமாறு வலியுறுத்தி, குரலற்றவர்களின் குரல் அமைப்பால் 'தண்ணீர் சேகரிப்புப் போராட்டம்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 15

### வவுனியா - கூமாங்குள பதற்றம்

## மரணத்தை விசாரிக்கச் சென்ற பொலிஸார் மீதே தாக்குதலாம்

### பொலிஸ் திணைக்களம் விளக்கம்

வவுனியா, ஜூலை 13
கூமாங்குளம் பகுதியில் மோட்டார்சைக்கிளுடன் ஒருவர் மூச்சற்று வீழ்ந்து கிடக்கின்றார் என்று பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு 15

### பிள்ளைகளுக்கு

## உணவு வாங்கச் சென்றவர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

### திருநெல்வேலியில் பரிதாபம்



யாழ்ப்பாணம், ஜூலை 13
திருநெல்வேலி - பலாலி வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ். சாலையில் பணியாற்றும் கி.பாலேஸ்வரன் (வயது-44) என்பவரே இவ்வாறு உயிரிழந்த 15

## வவுனியா நகரில் நேற்று யானையால் பதற்றநிலை

### விரட்டும் பணிகள் தோல்வி!

வவுனியா, ஜூலை 13
வவுனியா நகரப்பகுதிக்குள் நேற்று அத்துமீறி நுழைந்த யானையால் பெரும் பதற்றமும், அச்ச நிலையும் ஏற்பட்டது.
நேற்று அதிகாலை 15



'வவுனியாப்பக்கம் ஒரே கலக்கமாத்தான் இருக்கு கண்டியளோ'

### நயினாதீவு மருத்துவமனையில்

## வெளிநோயாளர் பிரிவு நேற்றுத் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13
66 மில்லியன் ரூபா நிதியில் புதிதாக அமைக்கப்பட்ட நயினாதீவு பிரதேச மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக் கட்டடத் திறப்பு விழா நேற்றுச் சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்றது. 15

## சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 12.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4130
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 05 32 37 63
விசேட எழுத்து W

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 12.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1197
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 25 48 58 61

**NLB ஜய**
திகதி 12.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0156
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 4 6 4 1

**மெகா பவர்**
திகதி 12.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2236
ஆங்கில எழுத்து S
சுப்பர் இலக்கம் 07
வெற்றி இலக்கங்கள் 03 28 30 48

**மஹஜன சம்பத**
திகதி 12.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5888
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 3 5 1 9 7 9

**தன நிதானய**
திகதி 12.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1918
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 12 13 50 67
விசேட எழுத்து Z

**அத சம்பத**
திகதி 12.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0463
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 1 9 7 9

**சுப தவசக்**
திகதி 12.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0004
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 11 19 40 47

# 1,200 பாற் பண்ணைகள் விரைவில் திறக்கப்படும்!

### கால்நடைப் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 13**
**100 லீற்றருக்கு மேல் பால் உற்பத்தி செய்யும் ஆயிரத்து 200 பண்ணைகள் விரைவில் திறக்கப்படும் என்று வேளாண்மை மற்றும் கால்நடைப் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், எங்கள் நாட்டின் தினசரி பால் உற்பத்தி சுமார் ஒரு மில்லியன் லீற்றராக உள்ளது. அதை மூன்று மில்லியனாக அதிகரிக்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். அது நடந்தால், எங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்யமுடியும். பால் உற்பத்தியின் மதிப்பை அதிகரிக்க மத்திய மையங்களை நாங்கள் கட்டிவருகிறோம். அந்தத் திட்டத்தை நாங்கள் அநுராதபுரத்தில் இருந்து தொடங்குவோம்.
அதன்மூலம் பால் விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியை வழங்குவோம். நூறு லீற்றருக்கு மேல் பால் உற்பத்தி செய்யும் 1,200 பண்ணைகளைத் தொடங்க நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.
கால்நடை விந்தணுக்களை இறக்குமதி செய்து 15 ஆயிரத்துக்கும் மேம்பட்ட விலங்குகளை வளர்க்க நாங்கள் திட்டங்களை வகுத்துவருகிறோம்- என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 12.07.2025 தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0596
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கம் 4 9 2 7 3 3

**Super Ball** DLB
திகதி 12.07.2025 தினம் சனிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2862
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கம் 20 60 77 78

**சனிதா** DLB
திகதி 12.07.2025 தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கம் 27 33 49 50
வெற்றி வாரம் 5023

**SASIRI** DLB
திகதி 12.07.2025 தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0724
வெற்றி இலக்கம் 01 05 23

**லக்ன ராசி** DLB
திகதி 11.07.2025 தினம் சனிக்கிழமை
மிதுனம்
வெற்றி இலக்கம் 09 33 42 44
சீட்டிழுப்பு வாரம் 4574

**KAPRUKA** DLB
திகதி 12.07.2025 தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து C
சுப்பர் இலக்கம் 20
வெற்றி இலக்கம் 10 16 18 75
வெற்றி வாரம் 2038

**அத கோடிபதி** DLB
திகதி 12.07.2025 தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கம் 08 12 58 64
வெற்றி வாரம் 2688

## மேர்வின் வழக்கு ஜூலை 28க்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 13
முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிரான வழக்கு எதிர்வரும் 28ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.
தனது சட்டபூர்வ வருமானத்திற்கு அப்பால் மில்லியன் கணக்கான ரூபா மதிப்புள்ள சொத்துகள், வாகனங்கள் மற்றும் வங்கிக் கணக்குகளைச் சேகரித்த குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## வவுனியாவில் உரிமைகளை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம்!

வவுனியா, ஜூலை 13
அனைத்துத் தேசிய இனங்களுக்கும் உரிமைகளை உறுதிசெய்யுமாறு கோரி சமஉரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கையெழுத்துப் போராட்டம் நேற்று இடம்பெற்றது.
வவுனியா இலுப்பையடிப்பகுதியில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு, காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்கு,சம உரிமைகளை உறுதிசெய்யும் புதிய அரசியலமைப்பை உருவாக்கு போன்ற கருத்துகள் முன்வைக்கப்பட்டன. போராட்டத்தில் மூவின மக்களும் கலந்துகொண்டனர். (ச-110)

## வெளிநாட்டு வருவாய் ஜூனில் அதிகரிப்பு


கொழும்பு, ஜூலை 13
வெளிநாட்டுப் பணியாளர்களால் கடந்த ஜூன் மாதத்தில் இலங்கைக்கு அனுப்பப்பட்ட பணத்தின் ஊடாக 635.7 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைத்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
இது 2024ஆம் ஆண்டு ஜூனில் பெறப்பட்ட 519.6 மில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடும்போது, 22 சதவீத அதிகரிப்பாகும்.
எனினும், 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் கிடைத்த 641.7 மில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் போது, அனுப்பப்பட்ட தொகையானது சற்றுக் குறைந்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ச-இ)



## அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைப்போம்

### அரசு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13
எதிர்காலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை மேலும் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவத்துள்ளார்.
நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கணிசமாகக் குறைந்திருந்தாலும், அது போதுமானதாக இல்லை. விலைகள் மேலும் குறையவேண்டும் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்றது. அதற்கமைய, எதிர்காலத்தில் விலைக் குறைப்பை மக்கள் அனுபவிக்கமுடியும் என எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## நல்லூர் உற்சவ ஏற்பாடு பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 13
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி வைரவர் சாந்தி உற்சவத்துடன் ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. உற்சவகால ஏற்பாடுகள் தொடர்பில் வீதித் தடைக்குள் வதியும் பொதுமக்களுடனான கலந்துரையாடல் யாழ்.மாநகரசபையின் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மண்டபத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பின்தங்கிய வடக்குக் கல்வி பொறுப்புக்கூறல் அவசியம்

## சைவமகாசபை வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஜூலை 13**

**சாதாரணதரப் பரீட்சை அடைவு மட்டத்தில் வடக்கு மாகாணம் தொடர்ச்சியாகப் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. இதற்கு வடக்கு மாகாணக் கல்வியமைச்சு பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்று இலங்கை சைவமகாசபை வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் சைவமகாசபையின் பொதுச்செயலாளர் மருத்துவக் கலாநிதி ப.நந்தகுமார் தெரிவிக்கையில்,

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை அடைவு மட்டத்தில் நாம் பின்தங்கி இருப்பதற்குக் கல்விப்புலத்திலுள்ள அதிகாரிகளின் பதிலை எதிர்பார்க்கின்றோம்.

குறிப்பாக பல கிராமப் பாடசாலைகளில் விஞ்ஞான, ஆங்கில சித்தி வீதங்கள் அறவே இல்லாத நிலை காணப்படுகின்றது.

சில பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்களின் உச்சபட்ச அர்ப்பணிப்பால் மிகச் சிறந்த பெறுபேற்றை அந்தப் பாடசாலைகள் அடைவு மட்டத்தில் அண்மைய காலங்களில் காண்பித்துவருகின்றன.

சில பாடசாலைகளில் தேவையற்ற விதத்தில் வளங்கள் கண்காணிப்பு இன்றிக் குவிக்கப்பட்டுள்ளமையும், இடமாற்றக் கொள்கை சரியான முறையில் ஒவ்வொரு ஆண்டும் வடக்கு மாகாணத்தில் பின்பற்றப்படாததும், பாமர மக்களின் பிள்ளைகளுக்குத் தகுந்த வழிகாட்டலை வழங்க எவரும் தயாராக இல்லாததும், அதீத போதைப்பொருள் பாவனை பரவலும் இதற்கு வழிவகுக்கின்றன.

எனவே இதுதொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு பொறுப்புக்கூறவேண்டியது அவசியம்-என்றார். (ச-66)

# மன்னார் நகரசபையில் கடந்த காலத்தில் ஊழல்?

## வெளிப்படுத்துவேனென நகரமுதல்வர் டானியல் தெரிவிப்பு

**மன்னார், ஜூலை 13**

மன்னார் நகரசபையில் இடம்பெற்ற கடந்த கால ஊழல் மோசடிகளை சட்டரீதியாக விசாரணைக்கு உட்படுத்தி ஊழல்வாதிகள் யார் என்பதை வெளிக்கொண்டுவருவேன் என்று தற்போதைய மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகரசபை முதல்வர் டானியல் வசந்தன் பொய்யான தகவல்களை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தி தனது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துகிறார் எனக் கூறி மன்னார் நகரசபையின் முன்னாள் தலைவர் அன்ரனி டேவிட்சன் அண்மையில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைவாக மன்னார் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தற்போதைய மன்னார் நகரமுதல்வர் டானியல் வசந்தன், வாக்குமூலத்தைப் பதிவு செய்த பின் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சபைக் காலகட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஏற்பட்ட ஊழல் நடவடிக்கைகளை அறிந்துகொண்டேன். குறிப்பாக கடந்த காலங்களில் பண்டிகைக்கால கடை வழங்குதல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளில் ஊழல் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது. குறித்த மோசடிகள் தொடர்பான சகல ஆவணங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. குறித்த விடயம் தொடர்பாக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுசென்று சட்டநடவடிக்கை எடுப்பேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# வெண்மையாக்கும் கிறீம்களால் தலைதூக்குகிறது அச்சுறுத்தல்

**கொழும்பு, ஜூலை 13**

நாட்டில் சருமத்தை வெண்மையாக்கும் கிறீம் பாவனையால் சரும நோய்க்கு ஆளாகுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பாடசாலை செல்லும் 12 ,13 வயது மாணவர்களும் இதில் அடங்குகின்றனர் என கொழும்பு தேசிய மருத்துவமனையின் நச்சு தொடர்பான தகவல் மையத்தின் விசேட மருத்துவ நிபுணர் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூகத்திலுள்ள பலர் தற்போது சருமத்தை வெண்மையாக்கும் கிறீம் வகைகளைப் பயன்படுத்துவதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். போதியளவான தெளிவின்மையால் சரும ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதை விடுத்து இவ்வாறான தரமற்றவற்றை உபயோகித்து சருமப் பிரச்சினைகளுக்கு ஆளாகுகின்றனர். இளம் யுவதிகளும், இளம் தாய்மார்களும் அதீத கிறீம் பாவனையால் ஏற்பட்ட சரும நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தோலை வெண்மையாக்கும் களிம்புகளில் தரமற்ற இரசாயனங்கள், பாதரசம், ஸ்டீரோய்ட் போன்ற தீங்கு விளைவிக்கக்கூடிய மூலப்பொருள்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அவற்றால் பாதிப்புற்றோர் மருத்துவமனைக்கு வருகைதரும்போது இணையவழியில் கொள்வனவு செய்ததாகத் தெரிவிக்கின்றனர்.

சருமத்தை வெண்மையாக்கும் கிறீம்களைப் பயன்படுத்துவதால் நாளடைவில் நீரிழிவு, சிறுநீரக நோய் மற்றும் நரம்பு சார்ந்த நோய்களுக்கு ஆளாகலாம்.

இந்தப் பாவனை தற்போது சமூகத்தில் பெரிய சுகாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளது - என்றார். (ச-இ)

# அமரர்கள் நினைவுதினம்

**கொழும்பு, ஜூலை 13**

அமரர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் 36ஆவது நினைவுதினம் நிகழ்வு இன்று 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அமரர்களின் உருவச்சிலைகள் அமைந்திருக்கும் வழக்கம்பரை வலி.மேற்குப் பிரதேசசபையில் காலை 7 மணிக்கும், மூளாயில் உள்ள அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை வளாகத்தில் 8 மணிக்கும் மலரஞ்சலி நடைபெறவுள்ளது. (ச)







# இலக்குத் தவறிய துப்பாக்கிச்சூடு

**கொழும்பு, ஜூலை 13**

கொஸ்கொடவில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் பின்னணியில் பாதாளக்குழு சம்பந்தப்பட்டுள்ளதாகவும் இலக்குவைக்கப்பட்ட நபரின்றி வேறொருவரே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அஹுங்கல்லவிலிருந்து கொஸ்கொட நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டி ஒன்றின்மீது நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், வெளிநாட்டில் தலைமறைவாகவுள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த 'ஷான் மல்லி' என்பவரின் தலைமையில் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

குறித்த முச்சக்கரவண்டியின் சாரதியான 'பாலே' என்பவரை இலக்குவைத்தே இந்தத் துப்பாக்கிச்சூடு திட்டமிடப்பட்டதாகவும் தவறுதலாக 'ரன் மஹாத்தயா' என்பவர் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

# மத்தள விமானநிலையத்தால் 260 மில்லியன் டொலர் கடன்

**கொழும்பு, ஜூலை 13**

மத்தள சர்வதேச விமானநிலையம் 260 மில்லியன் டொலர் கடனைக் கொண்டிருக்கிறது. எதிர்வரும் 2030ஆம் ஆண்டுவரை இந்தக் கடனைச் செலுத்த வேண்டியுள்ளது.

இந்த விமானநிலையத்தின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான திட்டமிடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வர்த்தக திட்டமிடலொன்று இன்றியே மத்தள விமானநிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மிகப்பெரிய கடன் ஏற்பட்டுள்ளது. சுமார் 260 மில்லியன் டொலர் கடனை எதிர்வரும் 2030ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டியுள்ளது. எனவே மத்தள விமானநிலையத்தில் விமானப் போக்குவரத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

விமானங்கள் பழுதுபார்த்தல், அவற்றைப் புதுப்பித்தல் போன்ற செயற்பாடுகளை இங்கு முன்னெடுக்க முடியுமா என்பது தொடர்பில் அவதானம் செலுத்தியிருக்கின்றோம்.

எனினும் ஓரிரு ஆண்டுகளில் எம்மால் அந்த இலக்கை அடையமுடியாது. இந்த விமானநிலையத்தால் கடன் மாத்திரமின்றி செலவும் காணப்படுகிறது- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்–2024

## யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை

பாலமுரளி தனோஷ் 9ஏ,ஹைலார் தர்ஜன் 9ஏ,இசமதி பிரதீபன் 9ஏ,கனிகா குகபரன் 9ஏ,நிமலன் ஜதுஷன் 9ஏ,சுதர்சன் ஆகாஷ் 9ஏ,ஸ்வர்ணிகா உதயன் 9ஏ,தர்ஷிகா பரமேஸ்வரன் 9ஏ, வவீன சூரியபவன் 9ஏ,விருத்திகா சதானந்தன் 9ஏ,விஷ்ணுபிரியா விக்னகுமார் 9ஏ,பாபு காவியன் 9ஏ, லக்சிகா அமிர்தசாகரம் 8ஏபி, வசிச கோகுலதாசன் 8ஏபி,கரிஷினி சத்தியசீலன் 8ஏபி, வர்ஷியா ரத்னகுமார் 7ஏ2பி,அஸ்மிகா ஜங்கரன் 7ஏ2பி, நடராசா கஜாதீஸ் 7ஏ2பி, ஷாலினி மயூகரன் 7ஏ2பிசி,தவசேகர் கேசிகன் 7ஏ2பிசி,புயலரசி ஜீவன் 6ஏ3பி,பாலசுதன் சுருஜன் 6ஏ2பிசி,

## உடுத்துறை மகாவித்தியாலயம்

வை.ரம்சிகா 9ஏ, யூ.கவியரசி 9ஏ, ரி.குகேசன் 9ஏ, எஸ்.கவிநிலா 9ஏ, வி.இசைவானி 8ஏபி, எ.சங்கவி 8ஏபி, எஸ்.தேனிலா 7ஏ2பி, கே.லாவன்யா 7ஏ 2பி, பி.கவிதரன் 7ஏ2பி, எஸ்.சுடர்விழி 7ஏ2பி, பி.கிரித்திகன் 6ஏ 3பி, ரி.தரணிதன் 6ஏ2பி சி, ரி.திகழிசை 5ஏ 4பி, எஸ்.யசோதனா 4ஏ 4பி சி, எ.அபிநயா 4ஏ3பி2சி, ரி.நிதர்சனா 3ஏ 5பி சி, வி.கலைமதி 3ஏ4பி2சி, எஸ்.இளங்கோ 3ஏ3பிசி2எஸ், எஸ். நிலமதி 2ஏ3பி3சி எஸ்,ஜெ.வானதி 2ஏ3பி2சி 2எஸ், எ.துர்கா ஏ5பி3சி, எஸ்.மதியாலகன் ஏ பி5சி2எஸ், ஜெ.ஜெசிந்தா ஏ5சி2எஸ், கே.ரதீபன் ஏபி5சி2எஸ் (ச-27)

## யா/ நடேஸ்வராக் கல்லூரி

ரி.டிலானி 5ஏபிசி2எஸ், ரி.பிரசாந்தினி 4ஏபி3சி, ஏ.பிரவீனா 2ஏபி4சி 2எஸ், ஆர். சஞ்ஜய் ஏ2பி3 சிஎஸ், எஸ். தமிழினி ஏபி5சி2எஸ், எம். மதுசிகா 2பி4சி3எஸ், எஸ்.பானுஜா பி4சி3எஸ் (ச-100)

## கிளி/வலைப்பாடு றோ.க.த.க பாடசாலை

அன்ரனி ஜெயக்குமார் மேரி இசாயினி 9ஏ, விமலதாஸ் எழில் 5ஏ3பிசி, சாந்தகுமார் சத்தியா 3ஏ3பிசி2எஸ், ஞானநேசரூபன் மிருஜா 6ஏபிசி எஸ், பியூஸ்லஸ் பிப்சிகா 7ஏபிசி, வசந்தகுமார் மேரிநந்தினி 2சி2எஸ், கெறோடியஸ் சுபரின்பன் 4சி3எஸ், வெனான்சியுஸ் மேரிறக்சனா 6சி2எஸ், சூசைநாதன் மேரியூட்சினி 4ஏ3சி2எஸ், நிக்சன் மேரி எல்சி ஏ4பி3சிஎஸ், வின்சன் டிபோல் அருன்னகை 2பி4சி2எஸ், றொபேட் ஆன்சன் குரூஸ் ஏ3பி4சிஎஸ், அருள்ராஜன் அருள்அழகன் 2பி2சி3எஸ், தவேந்திரன் அருளரசன் ஏ4பி3சிஎஸ், யூலியட் நிலவரசன் 3ஏபி5சி, ஞானசீலன் ஞானசாரங்கன் ஏ3பி4சி (ச-113)

## கச்சாய் மகா வித்தியாலயம்

நே.தமிழ்வாணன் 9ஏ, செ.சாரங்கா 6ஏ3பி, பி.அரவிந்தன் 6ஏ2சி, கி.நிர்த்திகா 4ஏ3பி2சி, க.அபிஷாலினி 3ஏ3பிசிஎஸ், சு.சானுசா 3ஏபி3சிஎஸ், சி.கவிப்பிரியா 24பி3சி, கு.யுவானஸ் 2ஏ4பிசிஎஸ், ஸ்ரீ.சயந்தா 2ஏ4பிசிஎஸ், பா.பிரதித்தன், ஏபி3சி2எஸ், சி.கிருஷாலினி 4பி3சிஎஸ், நி.டிலக்சிகா பி3சி3எஸ், (ச-159)

## விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்

சி.கதிர்நிலா 9ஏ, ஜெ.தேனுஜன் 8ஏபி, பி.மிதுர்சிகா 7ஏ2பி, ப.ஹபிசாந் 6ஏபி2சி, ஜெ.தேனுசன் 5ஏ2பி2சி, ஆ.ஆர்த்திகா ஏ2பி5சி எஸ், கே.ஜசினா பி3சி4எஸ், செ.கலையரசன் ஏ2பி 2சி2எஸ், ச.தமிழ்ச்செல்வி 4சி3எஸ், சு.சுபர்தன் 3சி4எஸ் (ச-25,9)




## யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்

ஜெ.கோவேந்தன் 9ஏ, ர.துஷாந்தன் 9ஏ, செ.தர்மிகா 7ஏபிஎஸ், வி.தீபிகா 5ஏபிசி2எஸ் (ச-9)

## இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்

நி.துஷாந் ஏ2பி4சி2எஸ்.க.டனோசாந் சி5எஸ், ப.புதியதீபன் 4சி4எஸ்.ம.ஷஜீன் 2சி6எஸ், இ.கஜந்தன் 3சி6எஸ், ஜெ.கஜானி ஏபி4சி2எஸ், வ.கஜானி பி5சி2எஸ்.கி. திவானி ஏ5சி2எஸ் (ச-159)

## காரைநகர் இந்துக்கல்லூரி

கே.நிரோஜ். 9ஏ, ஆர். நிபீசனன் 9ஏ, எஸ். ராகவி 7ஏ 2பி, எஸ்.நவநீதி 7ஏ பிசி, ஆர். நிலமிதன் 6ஏ,3பி, வை. ஹர்சன் 6ஏ,3பி, கே. விஷ்ணுகா 6ஏ 2பி சி, ஆர். சோபிதன் 6ஏ பி 2சி, ரி.ரம்சா யினி 5ஏ பி 3சி, ரி. டனுப்பிரியன் 5ஏ 2பி சி எஸ், ரி. தரணிபன் 5ஏ 3சி எஸ், எஸ்.ஹரிஸ்காந் 4ஏ 4பி சி, பி. கீதவாணி 4ஏ 2பி 2எஸ் (ச-25)

## அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம்

கே.கிசஜெனி 6ஏபிசிஎஸ், எஸ். ஜீவமதுசா 4ஏபி2சிஎஸ், ஆர்.மதுசியா 4ஏ2சி2எஸ், எம்.தர்சிகா 2ஏ2சி 4எஸ், யு.தியாஸ் ஏ2பி2சி2எஸ், ஏ. சானுஜன் ஏ3பிசி2எஸ், என். கபிசன் ஏபி3சி2எஸ், எஸ்.சபேஷ் 2பி2சிஎஸ்



## ஹாட்லிக் கல்லூரியில் 16 மாணவர்களுக்கு 9ஏ

யாழ்ப்பாணம், ஜூலை 13

தற்போது வெளியாகியிருக்கும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், யாழ்.ஹாட்லிக் கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றிய அத்தனைமாணவர்களும்சித்திபெற்றுள்ளனர். பரீட்சைக்குத் தோற்றிய 154 மாணவர்களுள் 16 பேர் 9ஏ சித்திகளையும், 22 பேர் 8ஏ சித்திகளையும், 20 பேர் 7ஏ சித்திகளையும் பெற்றுள்ளனர். (ச-25,100)

## யா/ வட்டு இந்துக் கல்லூரி

ஜோகேந்திரன் தருசன் 9ஏ, ஜூடெனிரோஷன் தரணிகா 9ஏ, மனோரஞ்சன ராசா துவாரகா 9ஏ, ரமணன் யாழினி 9ஏ, கிருஸ்ணாமூர்த்தி நிருபா 8ஏபி, சரவணபவன் சிவகாமி 8ஏபி, சிவஹாசன் குகஜினி 7ஏ2பி, விக்னேஸ்வரன் கோஷிகா 7ஏ2பி, ஜார்ஜ் ஜெயபாலன் மெர்சி நித்திலா 7ஏபிசி, சிவநீதன் சாருஜா 6ஏ2பிசி, பரந்தமன் தர்மேகா 5ஏ3பிசி, மகாலிங்கம் கஜன் 5ஏ3பிசிஎஸ், ஜெயச்சந்திரன் ஜெனோஷா 5ஏ2பி2சி, பேரின்பராசா பவிஷன் 5ஏபி2சிஎஸ், அருந்தவன் சாரணியா 4ஏ4பிசி, ராஜனிதரன் டனுசா 4ஏ3பி2சி, புவனேஸ்வரன் சிவாஜெனி 4ஏ2பி3சி, சௌந்தரராஜா துவாரகா 4ஏ4சிஎஸ் (ச)

## பளை தர்மக்கேணி அ.த.க. பாடசாலை

உ. நிலவரசி 9ஏ, செ. கலையமுதன் 8ஏ பி, பி.கிருஷிகா 8ஏசி, ர.இசைநிலா 7ஏ பி சி, லோ. பிரணவன் 7ஏ 2சி, த.டிலக்சிகா 5ஏ2பி2சி, ஜெ. துவாரகா 5ஏ2பி2சி, கு.தங்கநிலவன் 4ஏ2பிசி 2எஸ், பி. மதுமிதன் 4ஏபி (ச-25,9)

## கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

இரத்தினராசா ஜானுஜா 5ஏபி3சி



கொழும்பு நல்லாயன் மகளிர் மஹா வித்தியாலயத்தில் கல்விகற்கும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வ.சதுர்திகா என்ற மாணவி வெளியாகிய க.பொ.த. சாதாரணதரப் பெறுபேற்றில் 9ஏ சித்திகளைப் பெற்று சாதனைபுரிந்துள்ளார். (ச-25,27)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

பளை, ஜூலை 13

பச்சிலைப்பள்ளிப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

இளைஞர் கழகத்தில் உள்ள நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களை அவசியம் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 9)

## கந்தபுராணப் படிப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

நீர்வேலி தெற்கு கந்தபுராணக் கொட்டில் என அழைக்கப்படும் ஸ்ரீ முருகையா கோவிலில் வருடந்தோறும் இடம்பெற்றுவரும் கந்தபுராணத் தொடர் படிப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகும்.

கந்தபுராணப் படிப்பை முன்னிட்டு சிறப்புப்பூசை அபிஷேக வழிபாடுகள் இடம்பெறும். (ச-41-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாக செலுத்திய காலம் போய்விட்டது
இப்போது Plan இது மட்டும் தான்

MOBITEL 1598

NONSTOP*

Unlimited Calls
மற்றும் SMS 1000
எந்தவொரு வலையமைப்பிற்கும்

மேலதிகமாக
~~15GB~~ 40GB

மாதாந்தம் ரூ.1,598

To activate
SELFCARE APP
DOWNLOAD NOW

Reload the amount
Dial #170#
RELOAD NOW



5G READY
MOBITEL
Get eSIM



உங்கள் கனவுகளை நனவாக்கும் தொழில்வாய்ப்பு




உலகின் பல நாடுகளில் நிதியியல் துறையில் முன்னோடியாக இருக்கும் நாம் தற்போது

**யாழ் மண்ணிலும்** பிராந்திய அலுவலகத்தை ஆரம்பிக்க உள்ளோம்.

ஆகக் குறைந்தது O/L சித்தி

14,15,16 ஆம் திகதிகளில் நேர்முகத்தேர்வு இடம்பெறும் உங்கள் வருகையை முற்பதிவு செய்யுங்கள்



077-4865763 Tilko Hotal-Jaffna



**2026 ம் ஆண்டிற்கான அனுமதி தரம் 1**

உடுவில் மகளிர் கல்லூரி தரம் 1 இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை 14.07.2025 - 07.08.2025 காலப்பகுதிக்குள் பெற்றுக் கொள்ளலாம்.

**இடம் :** உடுவில் மகளிர் கல்லூரி காரியாலயம்

**நேரம் :** காலை 08.00 மதியம் 2.30

அதிபர்



Scan me!



**பணிப்பெண் தேவை**

கொக்குவிலில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு பணிப்பெண் தேவை.

**075 021 5299**



LOLC ரன் சவி

நிதித்துறை ஜாம்பவான்
தங்கக்கடன்
Digitalமயம்
ஆகியது

இப்போது LOLC ரன்சவி
Quick top - up வசதியுடன்
உங்கள் எந்தவொரு
பரிவர்த்தனையையும்
Online செய்துகொள்ளுங்கள்



சகல வங்கி பரிவர்த்தனைகள்
சகல பில் கொடுப்பனவுகள்
சகல கடனட்டை கொடுப்பனவுகள்
சகல ஒன்லைன் கொடுப்பனவுகள்

QUICK TOPUP

i-pay உடன் LOLC ரன்சவி தங்கக்கடன் பரிவர்த்தனைகளை செய்துகொள்ளும் உங்களுக்கு ஒரு புதிய வாய்ப்பு

தங்கத்தின் விலையில் ஏற்படும் மாற்றத்தின் பலனை அதே நாளில் அனுபவிக்கும் விதமாக இப்பொழுது ipay மூலம் LOLC ரன்சவி தங்கக்கடனை Top - up செய்து எங்கும் எந்த நேரத்திலும் வரிசைகள், இடையூறுகள் இல்லாமல், மேலதிக கட்டணமோ செலவோ இல்லாமல் கடன் தொகையை அதிகரித்திடுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: **0115 880 400**

Powered By ipay

www.lolcfinance.com

LOLC பினான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** மனதில் இனந்தெரியாத உற்சாகம் உண்டாகும். புதிய முயற்சிகள் அனுகூலமாகும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளின் வருகையால் உற்சாகமும் செலவுகளும் ஏற்படக்கூடும். மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் குழப்பம் ஏற்படக்கூடும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறுசிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்து சேரும். சிலருக்குக் கோயில்களுக்குச் சென்று வேண்டுதல்களை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். அலுவலகத்தில் அதிகாரிகளின் பாராட்டுகள் உற்சாகம் தரும்.

**துலாம்:** முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**விருச்சிகம்:** இன்றைக்குப் புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால்வீட்டில்சிலசங்கடங்கள் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை வழியில் எதிர்பார்த்த தகவல் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**மகரம்:** இன்றைக்கு உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுவருவார்கள். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டுவருவார்கள். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். மாலையில் குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வருவீர்கள்.

**மீனம்:** காரியங்களில்அனுகூலம்உண்டாகும்.உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.



## ‘உற்பத்தித்திறன் விருது’ விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜுலை 13

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் தேசிய உற்பத்தித்திறன் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்பதற்கான தெளிவூட்டல் செயலமர்வு யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைத்துறை, அரச துறை, உற்பத்தி மற்றும் சேவைகள் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அதன் பிரகாரம் பாடசாலைத்துறைக்கு யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் காலை 9 மணி தொடக்கம் மு.ப.11.30 மணி வரையும், உற்பத்தி மற்றும் சேவைகள் துறைக்கு யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மு.ப.11.30 மணி வரையும், அரசதுறைக்கு யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் பி.ப 1 மணி தொடக்கம் பி.ப 3 மணி வரையும் செயலமர்வுகள் நடைபெறும்.

விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள், நிறுவனங்கள் சார்பான பிரதிநிதி ஒருவர் செயலமர்வில் கலந்துகொள்ளவேண்டும். போட்டிக்கான முதற்கட்டப்பதிவுக்கான விண்ணப்பப்படிவங்களை 30.01.2026 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு 0212222235 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (ச-25)

## கருத்துரைகளும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், ஜுலை 13

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் மாதாந்தப் போயாதின நிகழ்வாக “போரும் புதைகுழிகளும்” எனும் தொனிப்பொருளில் கருத்துரையும் கலந்துரையாடலும் கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் சமூக, அரசியல் செயற்பாட்டாளரும், ஓய்வுநிலை வங்கியாளருமான எஸ். சிவபாலன் தொடக்கவுரையையும் யாழ்.பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன் ஜெ.ஜாதுசன் கருத்துரையையும் நிகழ்த்தினர். கருத்துரை முடிவில் சபையோர் கலந்துரையாடலும் நடைபெற்றது. (ச-41-66)



சிவயோகசுவாமிகள் அறக்கட்டளையினால் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட இரு மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டியும் கற்றல் உபகரணங்களும் யோகசுவாமிகள் சமாதிக்கோவிலில் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. (ச-41-17)

## மாமுனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவப் பெருவிழா!

யாழ்ப்பாணம், ஜுலை 13

மாமுனை ஸ்ரீ நாகதம்பிரான் திருக்கோயில் சாந்திக அலங்கார உற்சவப் பெருவிழா நாளை திங்கட்கிழமை பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 13 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை 1008 சங்காபிஷேகமும் இடம்பெற்று அன்றைய தினம் மாலை 4 மணிக்கு சமுத்திர தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

25ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருமஞ்சன கேணி உற்சவமும், 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெற்று மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு பிராஜசித்த அபிஷேகம் இடம்பெற்றுமாலை 6 மணிக்கு வைரவர் மடையுடன் திருவிழா நிறைவுக்கு வரவுள்ளது. (ச-25,100)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜுலை 13

வல்வெட்டித்துறை அருள்மிகு கப்பலுடையவர் தேவஸ்தான விசுவாவசு வருட அலங்கார உற்சவம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் இடம்பெற்று வரும் 24ஆம் திகதியான ஆடி அமாவாசை தினத்தில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறவுள்ளது.

வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழாவை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நம்பியாண்டார் நம்பி ஊர்வலம் இடம்பெற்று நாளை திங்கட்கிழமை மாலை அனுக்கை இடம்பெற்று இரவு வாஸ்து சாந்தி இடம்பெறவுள்ளது.

உற்சவத்தில் எதிர்வரும்22 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் 23ஆம் திகதி புதன்கிழமை இரதோற்சவமும் மறுநாள் 24ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ச-100)


## விடத்தல்தீவு மாநாடு



மன்னார், ஜுலை 13

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள விடத்தல்தீவுக் கிராமத்தின் பன்னாட்டு மாநாடு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமையும் நேற்று சனிக்கிழமையும் மன்னார் நகர மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. போரின் அனர்த்தங்களினால் உருக்குலைந்துபோன விடத்தல்தீவு போன்ற கிராமங்களின் பொருளாதார, சமூக, கலாசார அம்சங்களை மீள் கட்டியெழுப்புவதற்கும் ஆவணப்படுத்துவதற்குமாக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. முதல் நாள் நிகழ்வில் விருந்தினர்களாக வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலேசியப் பிரதமருடன் விஜித ஹேரத் சந்திப்பு

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அண்மையில் கோலாலம்பூரில் நடைபெற்ற 58வது ஆசியான் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டின் ஒரு பகுதியாக மலேசியப் பிரதமர் டத்தோ சேரி அன்வார் இப்ராஹிமைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, நீண்டகால இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் குறிப்பாக தொழிலாளர் நகர்வுத்துறையில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

மலேசியாவில் உள்ள பல்வேறு துறைகளில் இலங்கைத் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது குறித்து பரிசீலிக்குமாறு அமைச்சர் ஹேரத் மலேசியப் பிரதமரிடம் கோரினார்.

இலங்கையுடனான தொடர்ச்சியான நட்புறவை மலேசியப் பிரதமர் அன்வார் இப்ராஹிம் உறுதிப்படுத்தியதுடன், இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான தற்போதைய முயற்சிகளுக்கு ஆதரவையும் தெரிவித்தார். (ச-இ)

## கட்டுமரம் வலித்தல் போட்டி!

யாழ்ப்பாணம், ஜூலை 13

வடமராட்சி கிழக்கு குடத்தனையில் மாபெரும் கட்டுமரம் வலித்தல் போட்டி நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. அமரர் பொன்னையா செல்லத்துரை அவர்களின் 16ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக கட்டப்பட்ட குடத்தனை வடக்கு கடற்றொழிலாளர் சந்தைக் கட்டடத்தொகுதித் திறப்புவிழாவை சிறப்பிக்கும் வகையில் இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது. இந்தப் போட்டியில் மணற்காடு தொடக்கம் நாகர்கோவில் வரை வசிப்பிடமாகக்கொண்ட கட்டுமரம் வைத்திருப்பவர்கள் மாத்திரம் பங்கு பற்றமுடியும். ஒரு கட்டுமரத்தில் ஒருவர் மாத்திரம் போட்டியாளராகப் பங்குபற்றமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டியில் பங்கேற்று முதல் மூன்றிடங்களைப் பெறுவோருக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-100)

## பணியாளர் தேவை

கோண்டாவிலில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- வரவேற்பாளர்
- உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)
- சமையல் உதவியாளர்

**077 593 8090, 077 834 8336**

(CS/58841) J-1

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் ஆண்/ பெண் வேலையாள் தேவை. (சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- **076 632 3554**

## வேலைக்கு ஆள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் ஒரு வியாபார நிலையத்திற்கு கணனி தரவு பதிவதற்கு (Data Entry, Computer bill) 23 வயதிற்கு உட்பட்ட ஆண் பணியாளர்கள் மட்டும் தேவை

- கல்வி தகைமை : O/L - தமிழ், கணிதம், ஆங்கிலம் (ஓரளவு), கணனி அறிவு (ஓரளவு) அவசியம்.
- திருநெல்வேலி, கல்வியங்காடு, கொக்குவில் பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை வழங்கப்படும்.

தொடர்புக்கு: **077 663 6384**

(CS 3572) E

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ் கச்சேரி கிழக்கொழுங்கையில் 3 பரப்பு காணியில் அமைந்த வீடு, காணி முழுவதுமாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :- 077 520 6482
076 177 4183
0044 782 655 5271

(CS/58836) J-1

**www.EQMarriageService.com**

CALL 076 664 9401

ஒன்லைன் திருமணசேவை
Ensured Quality Lanka (Pvt) Ltd
Bambalapity, Colombo 04

| மணமகன் தேவை | மணமகள் தேவை |
|---|---|
| 1988, இந்து, பூரட்டாதி<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: கொக்குவில்<br>மணமகள் பதிவு இல:11598 | 1993, இந்து, ஸ்வாதி<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: சுதுமலை<br>மணமகன் பதிவு இல:11532 |
| 1974, இந்து, புனர்பூசம்<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகள் பதிவு இல:11541 | 1988, இந்து, மிருகசீரிடம்<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: வவுனியா<br>மணமகன் பதிவு இல:11378 |
| 1996, இந்து, பூராடம்<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: உடுப்பிட்டி<br>மணமகள் பதிவு இல:11382 | 1991, இந்து, திருவோணம்<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: புத்தூர்<br>மணமகன் பதிவு இல:10476 |
| 1990, இந்து, ரேவதி<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: தெல்லிப்பழை<br>மணமகள் பதிவு இல:11329 | 1989, இந்து, சதயம்<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: அளவெட்டி<br>மணமகன் பதிவு இல:11051 |
| 1996, இந்து, மிருகசீரிடம்<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: வடமராட்சி<br>மணமகள் பதிவு இல:11210 | 1980, இந்து, பூராடம்<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகன் பதிவு இல:10998 |

**CALL 076 664 9401**

## பணியாளர் தேவை

கோண்டாவிலில் முதியோர் இல்லத்தில் பணியாற்றுவதற்கு பெண் பணியாளர் தேவை

தொடர்பு: **077 564 4303**

## வீடு வாடகைக்குத் தேவை

கந்தர்மடம், கொக்குவில், கோண்டாவில் ஆகிய பகுதிகளில் மூன்று அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை

தொடர்பு: **076 909 4593**

## வீடு, கடை வாடகைக்கு

சில்லாலை 1ம் ஒழுங்கை சில்லாலை தெற்கு பண்டத்தரிப்பில் வீடு மற்றும் கடைகள் வாடகைக்கு உண்டு

தொடர்பு: **074 213 4562**

## வீடு / காணி விற்பனைக்கு

- 3.5 பரப்பு வீட்டுடன் கூடிய காணி பலாலி வீதிக்கு 500m தூரம் பரமேஸ்வரா சந்தி 53 மில்லியன்
- 1.5 பரப்பு வீட்டுடன் கூடிய காணி கண்டி வீதிக்கு அருகாமையில், கச்சேரி 26 மில்லியன்

தொடர்பு: **076 541 5030**

## பெரியவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்

ஆரம்பம் முதல் உயர் நிலை வரையிலான மாணவர்களுக்கான வகுப்புகள்

- ஆங்கிலம் பேசுதல், வாசித்தல், மற்றும் எழுதுதல்
- ஆங்கில உச்சரிப்பு
- ஆங்கில இலக்கணம்
- ஆங்கில சொற்களஞ்சியத்தை அதிகரித்தல்

**10 ஆண்டுகள் அனுபவமுள்ள ஆசிரியர்**
Dr. V. Saravanan
BSc (Hons) (UK), MSc, PhD (UK)

தொடர்புகளுக்கு: **070 683 2430**

(CS 58808) E

## வேலைவாய்ப்பு
## விற்பனை பிரதிநிதிகள் (Sales Representatives)

கொழும்பை அடிப்படையாகக் கொண்ட எமது நிறுவனத்திற்கு வட மாகாணப் பகுதிகளுக்கு திறமையான மற்றும் சுயமுயற்சியுடன் கூடிய விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- வவுனியா

**தகுதிகள்**

- தமிழ், ஆங்கிலம் ஆகியன கட்டாயம் தெரிந்திருத்தல் வேண்டும். சிங்களம் மேலதிக தகுதியாக கொள்ளப்படும்
- குறித்த பகுதியை பற்றி சிறப்பாக தெரிந்திருத்தல்.
- குறைந்தபட்சமாக சாதாரணதரம் (G.C.E. O/L) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்
- மோட்டார் சைக்கிள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இருக்க வேண்டும்

**சலுகைகள்**

- கவர்ச்சிகரமான அடிப்படை சம்பளம்
- கமிஷனுடன் கூடிய வருமானம்
- சிறந்ததொழில்முறை சூழல்

தொடர்புகொள்ள/CV அனுப்ப
WhatsApp : 076 149 0771
Email : sales@dhivyam.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்கள் கூட்டணிக்குள் கட்டமைப்பு மாற்றம் விரைவில்

## நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 13**

**தமிழ்மக்கள் கூட்டணிக் கட்சிக்குள் விரைவில் கட்டமைப்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளேன். எமது கட்சி எதிர்காலத்தில் கட்டுக்கோப்புடனும், கட்டுப்பாட்டுடனும் வீறுநடை போடவேண்டும் என்பதுதான் என்னுடைய பேரவா என்று கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

தமிழ்மக்கள் கூட்டணியின் உள்ளூராட்சிசபை உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.கொக்குவிலில் அமைந்துள்ள அறிவாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியின் தலைவராக நான் பொறுப்பேற்று முக்கியமான நடைமுறை அதிகாரங்களைப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் பொதுச் செயலாளருடன் பகிர்ந்துகொள்ள உத்தேசித்துள்ளேன். நான் விரைவில் கட்சிக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவேன் என்று நீங்கள் நம்பலாம். எமது கட்சி எதிர்காலத்தில் கட்டுக்கோப்புடனும், கட்டுப்பாட்டுடனும் வீறுநடை போடவேண்டும் என்பதுதான் என்னுடைய பேரவா. தமிழ்மக்கள் கூட்டணியின் ஆரம்ப கர்த்தா என்ற வகையில் எனக்கிருக்கும் அதிகாரங்கள் பலவற்றை உங்களுடன் பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகின்றேன். வட்டார, பிரதேச, மாவட்டக் கிளைகளை நாம் பலப்படுத்தி எமது உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து மாகாணசபைத் தேர்தலுக்கு நாம் இப்போதிருந்தே தயாராகவேண்டும். கட்சியின் விதிமுறைகளுக்கும், விதிகளுக்கும் கட்சியிலுள்ள ஒவ்வொருவரும் கட்டுப்பட்டு எமது கட்சியை ஒரு முன்மாதிரியான அரசியல் கட்சியாக மாற்றவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.
- என்றார். (ச-66)



# அறுவடை விழா

கிளிநொச்சி, ஜூலை 13

ஏரி - 362 நெல் வர்க்கம் செய்கை பண்ணப்பட்ட வயலில் நெல் அறுவடை விழா கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப்பணிப்பாளர் வி.சோதிலட்சுமி தலைமையில் கோணாவில் பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் காலநிலைக்குச் சீரமைவான விவசாயத் திட்டத்தின் பணிப்பாளர் எஸ்.எம்.சமன் பந்துல சேன, வடமாகாண விவசாய மேலதிகப் பணிப்பாளர் த.யோகேஸ்வரன், காலநிலைக்குச் சீரமைவான விவசாயத்திட்டத்தின் வடமாகாணப் பணிப்பாளர் ஏ.சி.பாபு, யாழ். பல்கலைக்கழக விவசாய பீடபண்ணை முகாமையாளர், விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர்கள், காலநிலைக்குச் சீரமைவான விவசாயத்திட்டத்தின் உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25,113)



சாவகச்சேரி சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமா காளி அம்பாள் கோவில் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ச 25,9-66)

# மடிக்கணினிகள் அன்பளிப்பு!

வல்வை சிவகுரு வித்தியாசாலை மாணவர்களின் தகவல் தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சிக்காக 10 மடிக்கணினிகள் வித்தியாசாலை அதிபரிடம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளன. மேற்படி பாடசாலையின் பழையமாணவர்களும் வல்வை உதயசூரியன் கழக உறுப்பினர்களுமான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நோர்வே வாழ் சாந்தமுரளி பாலராணி தம்பதியினரே அவற்றை அன்பளிப்பாக வழங்கிவைத்தனர். (ச-25,100)





வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய 2025 விசுவாவசு வருட மஹோற்சவப் பெருவிழாவின் 15 ஆம் நாள் மாலைத் திருவிழாவான கொடியிறக்க உற்சவம் கடந்த வியாழக்கிழமை இரவு பக்தி பூர்வமாக இடம் பெற்றது. (ச-41-66)

# மன்னார் விபத்தில் உயிரிழந்த மகனுக்கு சிகிச்சைக் கட்டிலிலிருந்து விடைகொடுத்த தந்தை

## மன்னாரில் உருக்கமான சம்பவம்

மன்னார், ஜூலை 13

மன்னார் - நானாட்டான் பிரதான வீதி, நறுவிலிக்குளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த சிறுவனின் உடலுக்கு அதேவிபத்தில் படுகாயமடைந்த தந்தை சிகிச்சைக் கட்டிலிலிருந்து விடைகொடுத்த சம்பவம் பலரையும் உருக்கியுள்ளது.

மன்னார்-நானாட்டான் பிரதான வீதி, நறுவிலிக்குளம் பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் தந்தை,தாய்,மகன் மற்றும் மகள் ஆகிய நான்கு பேரும் கடந்த வியாழக்கிழமை மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது பட்டா ரக வாகனத்துடன் மோதியதில் விபத்து இடம்பெற்றது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை,தாய்,மகன் மற்றும் மகள் ஆகிய நான்கு பேரும் பலத்த காயங்களுடன்மீட்கப்பட்டு மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும் பலத்த காயங்களுக்கு உள்ளான 4 வயதுடைய சிறுவன் சிகிச்சையின்போது உயிரிழந்தார்.

மேலும் பலத்த காயமடைந்த தந்தை,தாய் மற்றும் 12 வயதுடைய சிறுமி ஆகிய மூவரும் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் குறித்த 12 வயதுடைய சிறுமி மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த 4 வயதுடைய சிறுவன் உயிரிழந்த செய்தி தந்தைக்குத் தெரிவிக்கப்பட்ட நிலையில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி எழுந்து நடக்க முடியாத நிலையில் சிகிச்சை பெற்றுவரும் தந்தை தனது மகனுக்கு மருத்துவமனையில் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளார். இந்தச்சம்பவம் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (ச-56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# கல்விச் சீரமைப்பு அவசியம்!

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்திருக்கின்றன. வழக்கம்போல சில பாடசாலைகளின் பெறுபேறுகள் ஊதிப்பெருப்பிக்கப்பட்டு எம் கண்முன்பாக காட்சிப்படுத்தப்படுகின்றன. போதாததற்கு அந்தப் பெறுபேறுகள் ஒட்டுமொத்த வடக்கின் நிலையையும் கட்டியம் செய்வதுபோன்ற பிம்பமொன்றும் வலிந்து ஏற்படுத்தப்படுகின்றது. ஆனால், வடமாகாணத்தின் உண்மையான நிலையோ பரிதாபத்துக்கு உரியதாகவே அமைந்துள்ளது. அதிகளவான மாணவர்கள் சித்திபெற்ற மாகாணங்களின் பட்டியலில் வடமாகாணம் கடைசி இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, 70 சதவீதத்துக்கும் கீழான சராசரியைப் பெற்ற ஒரேயொரு மாகாணமாகவும் வடமாகாணமே காணப்படுகின்றது.

நியாயப்படுத்தமுடியாத தோல்விகள் என்று சில உள்ளன. அத்தகைய தோல்வியாகவே, வடமாகாணத்தின் இந்தப் பெறுபேறும் அமைந்துள்ளது. 'போர் தின்றுதீர்த்த மாகாணம்' என்ற காரணம்கூட இப்போது எடுபடாமல் போயுள்ளது. கிழக்கிலும் போர் இடம்பெற்றதுதான், அங்கும் இழப்புகள் 'வலிகள்' பின்னடைவுகள் - பலவீனமான உட்கட்டமைப்புகள் என்று வடக்கின் அதே பிரச்சினைகள் நிலவுகின்றனதான். ஆனால், கிழக்கு மாகாணம் மாணவர் சித்திச் சராசரியில் மூன்றாவது இடத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் கல்விக் கட்டமைப்பு முற்றாக மறுசீரமைப்புச் செய்யப்படவேண்டும் என்பதைத்தான் இந்தத் தரவுகள் வெளிப்படுத்துகின்றன. 'கல்விச் சீரமைப்பு' என்பது வெறுமனே பாடசாலைகளையும், வகுப்பறைகளையும் மட்டுமே சார்ந்த விடயமல்ல. மாறாகப் பரந்துபட்ட விடயமாகவே அமைந்துள்ளது. மாணவர்கள் போதைப்பொருள்களுக்கு ஆட்படுகின்றமை வடக்கில் அதிகரித்துள்ளது. எனவே, போதைப்பொருள்களின் அணுகலை மாணவர்களிடமிருந்து முற்றாக விலக்குவதும் கல்வி மறுசீரமைப்புத்தான். பாடசாலைகளுக்கு வெளியில், மாணவர்களை விழுங்கும் பேய்களும், பூதங்களும் வியாபித்திருக்கையில், பாடசாலைகளிலும், வகுப்பறைகளிலும் சீரமைப்புகளை மேற்கொள்வதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. எனவே, இங்கு கல்விச் சீரமைப்பு என்பது 'சமூகச் சீரமைப்பையும்' சேர்த்துத்தான். கொவிட் பெருந்தொற்றுக் காலத்தில், மாணவர்களின் கரங்களுக்குள் கற்றலுக்காக வலிந்து திணிக்கப்பட்ட திறன்பேசிகள் இன்றளவும் திருப்பிப் பெறப்படவில்லை. திறன்பேசிகள் இல்லாத மாணவர்களை இன்று காணவேமுடியாத நிலை வந்துவிட்டது. உச்ச அபத்தம் என்னவென்றால், தமது வேலைகளைச் சுலபமாக்குவதற்காக, பெற்றோர் தாமாக முன்வந்து பிள்ளைகளிடம் திறன்பேசிகளை ஒப்படைக்கின்றனர். இதன் தாற்பரியமும்தான் இன்று தரப்படுத்தலில் கடைசி நிலையில் இருப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

அதேநேரம், யாழ்ப்பாணத்தில் மாணவர்களுக்கு எத்தகைய வசதிகள் உள்ளனவோ அவை அனைத்தும் முல்லைத்தீவிலும் இருக்கவேண்டும், கிளிநொச்சியிலும் இருக்கவேண்டும், மலையகத்திலும் இருக்கவேண்டும். கல்விக் கட்டமைப்பில் பக்கச்சார்பான அல்லது சமனற்ற வளப்பங்கீடு இருப்பதென்பது குற்றமே. அந்தக் குற்றத்தை இதுவரை இருந்த அரசாங்கங்கள் சரிசெய்யவே இல்லை. சமமான வளப்பங்கீட்டுக்கான முன்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். 'தெற்காசியாவின் கல்விச் சமூகம்' என இருந்தவர்கள் நாங்கள். போர்க்காலத்தின்போதும்கூட அந்த நிலையை இழக்கவில்லை. போரின் பின்னர் அதை இழப்போமாயின், அது இனத்தின் தோல்வியாகவும் அமையும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

**இனிமையான பேச்சும் ஒரு விதத்தில் தர்மம்தான்.**

–நபிகள் நாயகம்




# தீவக அபிவிருத்திக்கு உந்துதலளிப்பேன்



## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 13**

**தீவக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இயன்றவரை முயற்சிசெய்வேன். அடுத்தாண்டு ஆரம்பிக்கப்படும் உலக வங்கி நிதியிலான அபிவிருத்திப் பணிகளில் தீவகத்துக்கு முன்னுரிமையளிக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

நயினாதீவு பிரதேச மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுக் கட்டடத் திறப்புவிழா நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தீவக மக்கள் எதிர்கொள்ளும் இடர்கள் தொடர்பில் எனக்குத் தெரியும். இந்தப் பிரதேசத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து உங்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு இயன்றவரையில் முயற்சிசெய்வேன். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உலக வங்கியினரை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கப் பணித்துள்ளார். அவர்களும் இந்தப் பகுதிகளை வந்து பார்வையிட்டுச் சென்றிருக்கின்றனர். பெரும்பாலும் அடுத்த ஆண்டு அபிவிருத்திப் பணிகள் ஆரம்பமாகுமென நினைக்கின்றேன். அதில் தீவகப் பகுதிகளிலுள்ள சில இறங்குதுறைகள் புனரமைக்கப்படுமென எதிர்பார்க்கின்றேன். அதனூடாக இந்தப் பகுதியின் சுற்றுலாத்துறை மேம்படும்-என்றார். (ச-66)

## மீனவர்களுக்கு எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 13


புத்தளம் முதல் கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை முதல் பொத்துவில் வரையிலான கடற்பகுதிகளில், அடுத்த 24 மணி நேரத்துக்குக் காற்றின் வேகம் அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறித்த கடற்பகுதிகளில் காற்றின் வேகமானது மணிக்கு 65 கிலோமீற்றராக அதிகரிக்கும். எனவே, குறித்த காலப்பகுதியில் கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்லவேண்டாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## சி.ஐ.டி.யினரால் சிப்பாய் கைது

கொழும்பு, ஜூலை 13

கொழும்பு பிலியந்தலைப் பிரதேசத்தில் வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் முன்னாள் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த கைது நடவடிக்கை நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)



## தங்கம் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 13

கடந்த இரு நாள்களுடன் ஒப்பிடுகையில் நேற்றுத் தங்க விலை 4 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளதாக, கொழும்பு செட்டியார் தெரு தங்கநகை வியாபாரிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 2 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாவாகவும் 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 2 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாவாகவும், விற்பனை செய்யப்படுகிறது. (ச-இ)

# பூமியின் சுழற்சி வேகம் ஜூலை, ஓகஸ்ட் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 13

பூமியின் சுழற்சிவேகம் அதிகரித்திருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த வேகம் ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் அதிகமாகக் காணப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஜூலை 9, 12 மற்றும் ஓகஸ்ட் 5 ஆகிய திகதிகளில் நேரம் சிறிது குறைவாகும் என்பதை உணரக்கூடிய நிலை ஏற்படும். இது 1.3 முதல் 1.5 மில்லி செக்கன் வரை குறையும். இவ்வாறு தொடர்ந்து நடைபெறுமானால் 2029ஆம் ஆண்டில் சில செக்கன்களை நேரத்திலிருந்து கழிக்கவேண்டிய நிலை ஏற்படலாம்.

இவ்விதமான சுழற்சி வேக அதிகரிப்பு 2020ஆம் ஆண்டில் ஆரம்பமாகியுள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

நாளை
திங்கட்கிழமை - ஆனி 30
14.07.2025
சுபநேரம் : 12.00 01.30
ராகுகாலம் :07.30- 09.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

விற்பனை முகாமையாளர் (Basic: 90,000/=)

உதவி விற்பனை முகாமையாளர் (Basic: 60,000/=)

- ஒன்லைன், பகுதி நேர வேலைவாய்ப்புக்களும் உண்டு.
- அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **077 996 9661**

## SP Tourist Hotel

Job Vacancies

- House Keeping - 05
- Supervisor - 01
- Driver - 01

Full Time and Experiences

Contact:- **075 030 5000**

No. 873, Hospital Road, Jaffna.

(CS/58848) J-1

## துப்புரவு பணியாளர் தேவை

சுண்டிக்குளியில் அமைந்துள்ள வீடொன்றை வாரத்தின் ஒரு நாள் மட்டும் துப்புரவு செய்வதற்கு நம்பிக்கையான துப்புரவு பணியாளர் (ஆண் அல்லது பெண்) தேவை.

- உணவு வழங்கப்படும்.
- வேலை நேரம் 8 மணித்தியாலம்.
- வயதெல்லை - 18 - 45
- சம்பளம் நாள் ஒன்றிற்கு 2500/-
- திறமையின்படி சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

**076 071 2085**

## வீடு வாடகைக்கு உண்டு

பலாலி வீதிக்கு அருகாமையில் கந்தர்மடத்தில் 04 அறைகளுடன் கூடிய வசதியான வீடு வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு: **077 587 8126**

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் அமைந்துள்ள உணவகம் (Restourant) ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- Bread, Bun, Pasty, Cake, Cake Icing, Pizza, Donut போன்ற உணவுகள் தயாரிக்க கூடியவர். (ஆண், பெண் இருபாலாரும்)
- உணவு பரிமாறுபவர் (Waiter)
- உணவு விநியோகிப்பவர் (Delivery Boy)

உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

**077 711 1831**

(CS/58848) J-1

## வல்வை முதியோர் இல்லம்

வீட்டுச் சூழலில் கனிவு நிறைந்த உபசரிப்புடன் சுகாதாரமாகத் தயாரிக்கப்பட்ட நிறை உணவு வழங்குகின்ற வல்வை முதியோர் இல்லம் புதிய முதியவர்களை இணைப்பதற்கு தயாராக உள்ளது.

இல்லத்தில் இணைய விரும்பும் முதியவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

www.valvaieldershome.com

நிர்வாகி:- **077 810 6857**
**077 154 2067**
**021 226 5551**

## வேலையாட்கள் தேவை

Sale Rep
Salary-75000/=

தொடர்பு: **077 775 0318**

## வேலையாட்கள் தேவை

EVent Planner
Decoration Helper (Boy)
Salary-45000/=

தொடர்பு: **077 775 0318**

## மணமகன் தேவை

யாழ் இந்து 1983 ம் ஆண்டு பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை.

077 230 67121, 076 452 3254

## விற்பனையாளர் தேவை

நெல்லியடியில் அமைந்துள்ள பிரபலமான புடைவையகத்திற்கு வேலை தெரிந்த பழகவிரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- **077 848 9459**

(CR/45496) J-1

## மரண அறிவித்தல்



### பாலசுந்தரம் சரஸ்சந்திரன்


கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் சரஸ்சந்திரன் கடந்த (09.07.2025) புதன்கிழமை கனடாவில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுந்தரம் - சரஸ்வதி தம்பதியரின் மகனும், இரத்தினகோபால் - தனலட்சுமி தம்பதியரின் மருமகனும், யோகராணியின் அன்புக் கணவரும், சரணியா, சரசாங்கி, சரசாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலைக்குமரனின் அன்பு மாமனாரும், இனாயாவின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2025) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
கனடா - +1 (437) 882 5159
இலங்கை 077 715 0931

தகவல்:
குடும்பத்தினர்

(CS 58838) E




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்கல் வேள்வி

யாழ். ஜூலை 13

பருத்தித்துறை, புலோலி மத்தி அருள்மிகு அவ் வொல்லைப் பிள்ளை யார் கோயிலில் குடி கொண்டிருக்கும் காத்த வராயர் சுவாமியின் வருடாந்த பொங் கல்(வேள்வி) விழா எதிர் வரும் 17, 18ஆம் திகதி களாக வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய நாள்களில் இடம் பெற உள்ளது. வருடாந் தப் பெங்கலை முன் னிட்டு நேர்த்திக்காக கோவிலில் கட்டப்படும் ஆட்டுக்கடா ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாவும், காவடி ஒன்றுக்கு ஐநூறு ரூபாவும், பாற்செம்பு ஒன்றுக்கு இருநூற்றைம் பது ரூபாவும் செலுத்த வேண்டும்.

அபிஷேகத்துக்குரிய உரிய பொருள்கள் வழங்க விரும்புவோர் முதல் நாள் நிர்வாகத்தி டம் ஒப்படைக்கவேண் டும் எனவும், நேர்த்திக்க டன் செய்வோர் நண்ப கல் 12 மணிக்கு முன்னர் நேர்த்தியை நிறைவு செய்து ஒத்துழைக்குமா றும் ஆலய பரிபாலன புனருத்தாரண சபை கேட்டுக்கொண்டுள்ளது.

(ச–100)

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 07 . 1985



மறைவு 11 . 07 . 2025

### இராமச்சந்திரன் ஜெயகாந்தன்

**(புதிய உயர் கல்லூரி பணிநிலை உத்தியோகத்தர் ஆரியகுளம்-யாழ்ப்பாணம்)**

சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமச்சந்திரன் ஜெயகாந்தன் கடந்த (11.07.2024) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் இராமச்சந்திரன் மற்றும் காலஞ்சென்ற நவமணி தம்பதியரின் அன்பு மகனும் தவசீலன் (மாவட்ட செயலக சாரதி), தவரஞ்சன் (உரிமையாளர்-SS Tourist Inn, ஆரியகுளம்-யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரனும், துஷாந்தினியின் மைத்துனரும், தர்மியா, றேமிகா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தகலட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**மடத்தடி வீதி,**
**சிறுப்பிட்டி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 984 6700**

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 05 . 1939



மறைவு 11 . 07 . 2025

### திருமதி இரத்தினம் நடேசன்

மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் நடேசன் அவர்கள் கடந்த (11.07.2025) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் கண்மணி, காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை, சண்முகம், மார்க்கண்டு, வீரசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அன்பழகன் (சுவிஸ்), அன்பரசன் (சுவிஸ்), அன்பரசி (சுவிஸ்), அன்பழகி (இலங்கை), அறிவழகன் (செக் குடியரசு) ஆகியோரின் அன்புத் தாயாரும் அருந்தவராஜா, ஜேகதாஸ், சிரோமி, தேவகி, ஜர்மிலா ஆகியோரின் மாமியும், அருண்ஜீவ், அனோத்ஜீவ், அண்டர்ஷன், சிரோஷன், அறோஷன், அறோஷியா, அபிறோஷன், அகிர்ஷா, அஜீவன், மைக்கேல், டானியல், ஜோன்சன், நட்டாலி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### கந்தையா கலாவதி

**(ஓய்வு நிலை விஞ்ஞான, ஆங்கிலப் பாட ஆசான் யா/ இணுவில் இந்துக் கல்லூரி)**



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கலாவதி அவர்கள் கடந்த (11.07.2025) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-வள்ளியம்மை தம்பதியின் இளையமகளும், காலஞ்சென்றவர்களான குலேந்திரா (உதவி அரச அதிபர்-கோப்பாய்), சத்தியமூர்த்தி (தபாலதிபர்), கமலவேணி, சத்தியவேணி, இரவீந்திரன் (கிராம அலுவலர்), விஜயவேணி, அருள்சோதி மற்றும் சுந்தரமூர்த்தி (MLT), சண்முகேந்திரன் (பெற்றோலியம் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவாஈஸ்வரிஅம்பாள், தவயோகராணி, காலஞ்சென்ற வர்களான யோகநாதன் (பிரதி அதிபர்), ஆனந்தராசா (ஆசிரியர்), வனஜா மற்றும் ஜெயராணி, சிவகுமார் (அதிபர்), ஜெகநாதன், சுகுணராணி (ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்) ஆகியோரின் மைத்துனியும், சிவவேந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), மதுரா (கனடா), மீரா (ஆசிரியர்), மதனமோகன், மாறன் (Research- Sciencist,USA), அருண்பிரசாத் (ஆய்வு கூட உதவியாளர்), சோபிகா (ஆசிரியர்), விதுஷா (பல்கலைக்கழகம்), நிருஷா, அகல்ஜா ஆகியோரின் மாமியாரும், மதிவதனன், கலைவாணி, அமுதவேணி, திருக்குமரன் (லண்டன்), மைதிலி (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), துர்க்காயினி, சிவசக்தி, ஜெயமோகன் (சமுர்த்தி உத்தியோகத்தர்), தயானி, யமுனா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), இராகவசொரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), ஆகியோரின் சிறிய தாயாரும், சயான், கிரிசாந், மதுஷன், கம்சவர்ஷினி, ஹரிஸ்பவன், விஜான், டிவிஸ், ஜனுயன், அட்சயா, லதுசிகா, லதுசனா, சாரபி, நிர்த்திகன், ஆதிரன்,ஆர்ஷன், நிஷ்விகா, அக்ஷரன், அஸ்விகன், ஆதீஸ், ஆரன், சிறீஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தோற்றம் 09.02.1960**
**மறைவு 11.07.2025**

**இணுவில் மேற்கு,**
**இணுவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## பாலசுப்ரமணியம் நாகேஸ்வரி



சிங்கப்பூரை பிறப்பிடமாகவும் வளாகவீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்ரமணியம் நாகேஸ்வரி அவர்கள் கடந்த (11.07.2025) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - பொன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற பாலசுப்ரமணியம் அவர்களின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கனகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் செல்வமதி ஆகியோரின் சகோதரியும், செல்வராணி, சுகந்தி (Swiss), பாலகுமார் (சௌமியா களஞ்சிய உரிமையாளர்), ஷாமினி (London), காலஞ்சென்ற செல்வகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற உதயகுமார் (கலட்டிக்கண்ணன்) மற்றும் சுதாகரன் (Swiss), அழகேஸ்வரி (செல்வி), காலஞ்சென்ற தவசீலன் ஆகியோரின் அன்பு மாமியும், நிரேஷன் (கயன்) - துர்க்காலக்சுமி (Karudda (PVT) LTD), நிவேதிகா - சொபிசன் (Dr. Pet vet - Colombo), விதுஷன் - பிருந்திகா (Ondraga groups உரிமையாளர்), யதுஷன் (Doctor), உதயரோசன் (உமேஸ்) (The Chola Samraaj Restaurant - உரிமையாளர்), மாதுளன் (Swiss), சௌமியா (யாழ் மருத்துவ பீடம்), மதுஷனா (யா/இந்து மகளிர் கல்லூரி A/L (2024)), சர்மிதா (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவி), தாருஜன் (London), தாருக்ஷா (London) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆதிரன், அதிதி, ஆருஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தோற்றம்
08.03.1946

மறைவு
11.07.2025

56/14 வளாகவீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்

தகவல்
குடும்பத்தினர்
077 642 3560
077 079 1606
077 938 2173

# நான்காம் ஆண்டு நினைவலைகள்





அமரர்
## கிருபாமூர்த்தி சிந்துஜன்

அன்னை மடியில்
20.02.1988

கந்தன் அடியில்
26.06.2021

எம் இதயத் துடிப்பில் உன் பெயர்தான் - என்றும்
தூய நினைவாய் வாழ்கின்றாய் ! - உன்
அழகான அந்த சிரிப்பு !
ஆழமான அந்த வார்த்தைகள் !
அவையெல்லாம் என்றும் எம்மோடு கூடியிருக்கும் - நம்
நிழலாய் நிறைந்தாய் நாள்தோறும் - எம்
நினைவில் மலராய் விரிகின்றாய் ....
மண்ணுலகில் உன் சுவடு விட்டு
விண்ணுலகில் சரணமேற்று - எம்
மனதில் கோவில் கட்டியவனே!
உன்னால் துளிர்க்கும் கண்ணீர் சொட்டு !
நீயின்றி நிறைந்த ஒரு உலகுமில்லை
நினைவெல்லாம் நின்னோடு !
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !



"அக்கா அகம்"
சிந்துஜன் ஒழுங்கை,
கே.கே.எஸ் வீதி, இணுவில்.

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(65/58837) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 . 02 . 1944

மறைவு 05 . 07 . 2023

அமரர்

**மாணிக்கம் கிருஷ்ணசாமி**

(உரிமையாளர் - இலட்சுமியவான், கிளிநொச்சி)

ஆண்டுகள் இரண்டு ஓடிப்போனது
ஆறாத துயர் மட்டும்
இன்னும் ஓய்ந்ததில்லை
மாறாத பந்தமும்
நீங்காத நினைவுகளும்
அப்பா எங்களோடு தான்
வாழ்ந்திடுவாய் வருடங்கள்
பலவானாலும்

மடத்தடிச் சந்தி,
கல்வயல், சாவகச்சேரி.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS/58844) J-1



வல்வை சிதம்பரா கணிதப் போட்டி

# லண்டனில் விருதுபெறும் தமிழ் மாணவர்கள்!

வல்வை சிதம்பரா கணிதப் போட்டி-2025 வெற்றியாளர்களான நான்கு தமிழ் மாணவர்கள் நேற்று சனிக்கிழமை லண்டனில் நடைபெற்ற நிகழ்வில் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர். வல்வை சிதம்பரா கணிதப் போட்டியில் தோற்றி சிறப்புச் சித்திபெற்ற மாணவர்களில் முதன்மை மாணவர் தெரிவுக்கான இரண்டாவது விஷேட பரீட்சை வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் கடந்த மாதம் இடம்பெற்றிருந்தது. இவ்விசேட பரீட்சையில் தோற்றிய அருணோதயக் கல்லூரி மாணவன் ரா.ஆருஜன், கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவன் லி.தஸ்வின், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் ம.ஜஸ்வித் மற்றும் கொழும்பு றோயல் கல்லூரி மாணவன் ச. கீதன் ஆகியோர் இலங்கை வெற்றியாளர்களாகத் தெரிவாகியுள்ளனர். இவர்கள் லண்டனில் நடைபெற்ற நிகழ்வில் நேரில் பங்கேற்று விருதுகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-25,100)

## மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 03 . 1951

மறைவு 04 . 07 . 2025

**கிளறன்ஸ் லீலாவதி (லீலா)**

யாழ்ப்பாணம் இராஜ சிங்கம் வீதியை பிறப்பிடமாகவும் 12/24 மத்தியூஸ் வீதி சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட கிளறன்ஸ் லீலாவதி (லீலா) 04.07.2025 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற யோசேப்பு - மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கிளறன்ஸ் (அலன்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மேரி கிளிண்டிஸ் (கொலின்ஸ்), மேரி கிளமென்ற் (யூலன்) மற்றும் மேரி கலிஸ்ரஸ் (ஜெறுான் பெல்ஜியம்), காலஞ்சென்ற மேரி கிளைவ் (அஞ்சோ) மற்றும் மேரி ஜெமாலினி (ஜெனி), மேரி றீனாலோஜினி (றீனா), மேரி கிளைவ்வின் (ஜெனத் பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ் மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 58840) E

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**கலைமதி செல்லத்துரை**



(கணக்காளர்)
(BBA (Hons), Dip inpub ADM,
MA in Pub ADM, LLB (Hons)
(முன்னாள் கணக்காளர் -
வடபிராந்திய சுகாதார சேவைகள் -
பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்,
மன்னார் மற்றும் தென்மராட்சி
வலயக்கல்வி அலுவலகம்,
முன்னாள் போதனாசிரியர்
அஞ்சல் பயிற்சிக் கல்லூரி -
யாழ்ப்பாணம்.)

தோற்றம் 20.07.1974

மறைவு 15.07.2022

கண்ணிமைக்கும் வேகத்தில்
மூன்றாண்டுகள் கடந்து விட்டது.
காலச் சக்கரம் மட்டும் ஏனோ
கடுகதியில் சுழல்கின்றது.
நிரந்தரமற்றது இம் மானிட வாழ்வு
என்று எமது புத்திக்கு தெரிந்தாலும்
மனமோ அதை ஏற்க மறுக்கிறது.
கள்ளம் கபடம் இல்லா உன் சிரிப்பும்
கனிவான உன் பேச்சும்
எம் இதயங்களை விட்டகலா
நிலையான நினைவுகள்.
எங்கள் உயிரோடு கலந்த உன்
நினைவுகளோடு .........

72/50 பணிக்கர் லேன்,
திருநெல்வேலி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/58814) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகாமையில்)

077 138 7596, 071 999 9306



## பணியாளர் தேவை



யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள வீடு மற்றும் வீட்டை அண்டிய பூந்தோட்டத்தினை துப்பரவு செய்யக் கூடிய பணியாளர் தேவை.

வெளிநாட்டில் பணி புரிந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 120 9998





## Angel International School, Manipay

## VACANCY

**Driver / சாரதி / உதவி ஊழியர்கள்**

**Requirements**

* சாரதி அனுமதிப்பத்திரம் (பாரவூர்தி) உடையவராக இருத்தல் வேண்டும்.
* வயதெல்லை: 35 - 55
* ஆகக்குறைந்தது 02 வருட அனுபவம்.
* நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய் பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

Further Details: Mr. Jeevan: 077 844 8020

Angel International School, Mathers Lane, Manipay


## புலிக்குளத்தின் நீர்விநியோகம்

# ஆய்வறிக்கை சமர்ப்பிக்க ஆளுநரால் குழு நியமிப்பு

முல்லைத்தீவு, ஜுலை 13

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவி லுள்ள புலிக்குளத்தை எதிர்காலத்தில் மாகாண நீர்பாச னத் திணைக் களத்தின்கீழ் உள் வாங்குவதற்கும் அதன் நீர் விநியோகச்செயற்பாட்டை ஆய் வுகள் மேற்கொண்டு ஒரு மாத காலத்தினுள் அறிக்கை சமர்ப் பிப்பதற்கும் வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையிலான குழுவொன்று வடக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டுள் ளது.

முல்லைத்தீவு மற்றும் கிளி நொச்சி மாவட்ட ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டங்களில் ஆராயப் பட்ட புலிக்குளம் தொடர்பான சர்ச்சைக்குத் தீர்வு காணும் நோக்கில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கலந்துரையா டல் நடைபெற்றது.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிர தேச செயலாளர் பிரிவின் கீழுள்ள புலிக்குளம் கடந்த காலங்களில் தவறான தகவல் கள் வழங்கப்பட்டதன் அடிப் படையில் கிளிநொச்சி மாவட்டத் துக்கு மாற்றப்பட்டது.

கிளிநொச்சி அறிவியல் நகரி லுள்ள யாழ். பல்கலைக்கழகத் தின் வளாகத்துக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் எதிர்ப்பில்லை எனவும், முல்லைத் தீவு மாவட் டத்தின் முறிகண்டியைச் சேர்ந்த மக்களுக்குரிய வாழ்வாதாரத் துக்கு நீர் வழங்கவேண்டும் என் றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் குறிப்பிட்டார். புலிக் குளத்தின் கொள்ளளவு மற்றும் அதன் புனர்நிர்மாணம் தொடர் பில் கடந்த காலங்களில் மத்திய அரசின் நீர்ப்பாசனத் திணைக்க ளத்தால் ஆய்வுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளதாகக் கலந்துரை யாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கமையவே ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையை அடிப்படையாக வைத்து மேலதிக ஆய்வுகள் மேற்கொண்டு ஒரு மாத காலத் தினுள் அறிக்கை சமர்ப்பிப் பதற்கு ஏதுவாக வடக்கு மாகாண நீர்பாசனத் திணைக்களத் தின் பணிப்பாளர் தலைமையில் குழு வொன்று ஆளுநரால் நியமிக் கப்பட்டது.

(சு-35)

## சாவகச்சேரிப் பிரதேசசபை அமர்வில் ஊடகங்கள் பங்கேற்கத் தீர்மானம்

பதிவுசெய்யப்பட்ட ஊடகங்களை சபை அமர்வில் கலந்துகொள்ள அழைக்கவேண்டும் என சாவகச்சேரிப் பிர தேசசபையின் சபை அமர்வில் தீர்மானம் நிறைவேற் றப்பட் டுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேசசபையின் முதலா வது சபை அமர்வு கடந்த புதன்கிழமை காலை 9.30 மணிக்குத் தவிசாளர் பொ.குக தாசன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சபை உறுப்பினர் செ.மயூ ரன், பதிவுசெய்யப்பட்ட அச்சு ஊடகங் கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டும் சபை அமர்விற்கு வருவதற்கான அனுமதியும் அவர்களுக்கான அழைப் பும் வழங்கப்படவேண்டும் எனும் பிரே ரணையை முன்வைத்தார். அந்தப் பிரேரணை சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. (சு-159)

## அடிப்படை வசதிகளற்று சாவகச்சேரிப் பிரதேசம்!

### தே.ம. சக்தியின் உறுப்பினர் சுட்டிக்காட்டு



சாவகச்சேரிப் பிரதேச மக் கள் அடிப்படை வசதிக ளற்ற நிலையிலேயே உள் ளனர் என்றும் அந்தக் குறைபாடுகள் நிவர்த்திக் கப்படவேண்டும் என்றும் சாவகச்சேரி பிரதேச சபையின் முதலாவது சபை அமர்வில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் திருமதி இ.வெண்ணிலா சுட் டிக்காட்டியுள்ளார்.

தனங்களப்பு, மறவன்புலவு, கோகிலாக் கண்டி மற்றும் மிருசுவில் வடக்கு ஆகிய கிராமங்கள் மிகவும் பின்தங்கிய கிராமங் களாக உள்ளன. இந்தக் கிராமங்களில் குடிதண்ணீரின்றி மக்கள் பெரும் சிரமங் களை எதிர்கொள்கின்றனர்.

அத்தோடு வீதிகள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் காணப் படுவதால் வீதிகள் புனரமைப்புச்செய் யப்படவேண்டும். மின்விளக்குகள் இல்லாமல் வீதிகள் இருளில் மூழ்கி யுள்ளன.

மழைகாலத்தில் வீதிகள் வெள்ளத் தில் மூழ்கிப் பிரயா ணம் செய்யமுடி யாத நிலை காணப் படுகிறது.

எனவே சாவகச்சே ரிப் பிரதேசத்தின் உட்கட்டமைப்பு வச திகள் விரைவில் மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(சு-159)


## கண்ணீர் அஞ்சலி



**குமாரவேலு தங்கலட்சுமி**

சரவணை மேற்கை பிறப்பிடமாகவும் பொன்னையா வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு தங்கலட்சுமி அவர்கள் நேற்று (12.07.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் பொன்னையா-கணமணிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை-கண்ணுப்பிள்ளை தம்பதியின் அன்பு மருமகளும், குமாரவேலுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற உமா மற்றும் அகிலன், யாழினியின் அன்புத் தாயாரும் வாசுகி, காலஞ்சென்ற இராமநாதன் ஆகியோரின் சகோதரியும், கோகுலவாசன், கீர்த்திகா ஆகியோரின் மாமியாரும், குகவருண், மேதிரா, அக்ஷயா, ஐஸ்வர்யா, அஸ்வினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 01.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ.குமாரவேலு (கணவர்)



## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 05 . 07 . 1935



உதிர்வு 10 . 07 . 2025

**அமரர் அட்சலிங்கம் ஜெயலட்சுமி**
(5ம் வட்டாரம் நயினாதீவு)

எமது கழகத்தின் ஆயுட்கால உறுப்பினரும் தற்போதைய பொருளாளருமான திருமதி. அட்சலிங்கம் யசோதரராசா மற்றும் கழகத்தின் நீண்டகால உறுப்பினரான திருமதி பாரதி சோதீஸ்வரா ஆகியோரின் பாசமிகு தாயார் அட்சலிங்கம் ஜெயலட்சுமி காலமாகிவிட்டார். அவர்களின் மறைவிற்கு நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம்-பிரித்தானியா தனது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றது.

நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் பிரித்தானியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயங்கி...

முதியவர் கடந்த சில நாள்களாக கடும் வெயிலால் ஏற்பட்ட உபாதைகளால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று மரண விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணைகள் அதிகாரி வின்சன்ட் தயான் அன்ரலா மேற்கொண்டார்.

(அ-ம-26)

## நெடுந்தீவில்...



நேற்றுச் சனிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

நெடுந்தீவைச் சேர்ந்த தனியார் ஒருவருக்குச் சொந்தமான சிறியரக படகில் தென்னிலங்கையைச் சேர்ந்த 12 சுற்றுலாப் பயணிகள், 2 பணியாளர்கள் என 14 பேர் பயணித்துள்ளனர். இதன்போது படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, படகு திடீரென நடுக்கடலில் மூழ்க ஆரம்பித்துள்ளது. இதையடுத்து படகிலிருந்தவர்களால் வெள்ளைக்கொடி (படகு மூழ்குகின்றது அல்லது பெரும் ஆபத்தில் உள்ளது என்பதை வெளிப்படுத்துவதற்காக மீனவர்கள் பயன்படுத்தும் சமிக்ஞை) பறக்கவிடப்பட்டது.

தெய்வாதீனமாக அந்தப் பகுதியால் சென்ற பிறிதொரு படகு, வெள்ளைக் கொடி காட்டப்படுவதை அவதானித்து, மூழ்கிக்கொண்டிருந்த படகைநோக்கி வேகமாகச் சென்றுள்ளது. இதன்போது படகு பாதியளவில் மூழ்கியிருந்துள்ளது. படகு மேலும் மூழ்காமல் இருப்பதற்காக, படகின் அணியத்தை, பிறிதொரு கயிற்றின் மூலம் அவர்கள் இறுகப் பிணைத்துள்ளனர். இடைப்பட்ட ஐந்து தொடக்கம் பத்து நிமிடங்களில் மூழ்கிய படகிலிருந்த அனைவரும் உதவிக்கு வந்த படகில் இருந்தவர்களால் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகள் நிறைவடைந்த இறுதி நிமிடத்தில் அந்தப் படகு முற்றாக மூழ்கியுள்ளது.

உதவிக்குச் சென்ற படகு ஐந்து நிமிடங்கள் தாமதமாகச் சென்றிருந்தால், நேற்றுப் பெரும் அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

(அ-ம-26-66)

## மரணத்தை...

அமைய, சம்பவ இடத்துக்கு விசாரணைக்காகச் சென்ற பொலிஸ் அலுவலர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா கூமாங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு மோட்டார்சைக்கிளுடன் வீழ்ந்திருந்த நிலையில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். 'வீதியால் சென்ற நபரின் மோட்டார்சைக்கிளுக்கு பொலிஸார் தடியைச் செருகியே இந்த விபத்தை ஏற்படுத்தினார்கள்' என்று குற்றஞ்சாட்டி பொதுமக்கள் குழப்பத்தில் ஈடுபட்டனர். சில நிமிடங்களில் அந்தக் குழப்பம் கலவரமாக மாறியதைத் தொடர்ந்து, ஐந்து பொலிஸார் தாக்குதலில் காயமடைந்தனர். அத்துடன், பொலிஸ் வாகனங்களும் தாக்குதலுக்கு உள்ளாகின. பின்னர், கலகமடக்கும் பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு, வானத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சடலம் மீட்கப்பட்டு மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் நேற்று விரிவான விளக்கத்தை வழங்கியுள்ளனர். இதன்போதே, 'பொலிஸார் மோட்டார்சைக்கிளின் சக்கரத்துக்குள் தடியைச் செருகி இந்த விபத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக, மோட்டார்சைக்கிளுடன் வீழ்ந்த நிலையில் ஒருவர் பேச்சுமூச்சற்றுக் கிடக்கின்றார் என்று வழங்கப்பட்ட தகவலுக்கு அமையவே விசாரணை நடத்தச் சென்றனர்' என்று கூறியுள்ளனர்.

'விபத்துக்குள்ளான மோட்டார்சைக்கிளின் சக்கரத்துக்குள் பொலிஸார் தடியைச் செருகவில்லை. அவ்வாறு செருகியிருந்தால், மோட்டார்சைக்கிளின் சக்கரம் சேதமடைந்திருக்கும். ஆனால் மோட்டார்சைக்கிளின் சக்கரத்துக்கு எந்தச் சேதமும் இல்லை' என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவ இடத்தில் நேற்றுத் தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதியும் சம்பவ இடத்தைப் பார்வையிட்டார். அத்துடன் விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறும் அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

(அ-ம-110)

## உணவு...

வராவார். சைக்கிளில் பயணித்த அவர், திருநெல்வேலி, பலாலி வீதியில் அமைந்துள்ள உணவகமொன்றில் உணவருந்திய பின்னர், பிள்ளைகளுக்கும் உணவைக் கொள்வனவு செய்துகொண்டு வீதியில் ஏறியபோது, ஹைஏஸ் வாகனத்துடன் இந்த விபத்து சம்பவித்துள்ளது. படுகாயமடைந்த அவர், விபத்துச் சம்பவித்து சில நிமிடங்களிலேயே உயிரிழந்தார். விபத்துத் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணைகள் அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

(அ-ம-26)

## வவுனியா...

வவுனியா தவசிகுளம், தோணிக்கல் வழியாக வவுனியா நகரை அடைந்த காட்டு யானை தோணிக்கல் பகுதியில் வீடொன்றை சேதப்படுத்தியுள்ளதுடன் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிளையும் துவம்சம் செய்துள்ளது.

பின்னர் வவுனியா நகரின் சந்தை சுற்று வட்ட வீதியூடாக தினச்சந்தையை அடைந்து, வவுனியா நகரப் பகுதியில் உள்ள குளத்தில் இறங்கியது. இதன்போது சில மதில் சுவர்களையும் அது சேதப்படுத்தியுள்ளது. குளத்தில் இறங்கிய யானை நேற்று மாலை வரை வெளியேறவில்லை.

இதையடுத்து, தோணியில் சென்று வெடிபோட்டு யானையைத் துரத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. வெடிகள் போடப்பட்டதைத் தொடர்ந்து குளத்தை விட்டு வெளியேறிய யானை, பூந்தோட்டம் மயானத்தின் பின்பகுதியில் உள்ள சிறிய பற்றைக்காட்டுக்குச் சென்று அங்கு தங்கியுள்ளது. நேற்று நள்ளிரவு வரை யானை செல்லவில்லை. யானையைத் துரத்தும் அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்த நிலையில், நள்ளிரவைத் தாண்டிய பின்னரும், அதை விரட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவந்தன.

வவுனியாவின் யானைத் தொல்லைகள் வழக்கமான ஒன்றாக உள்ளபோதிலும், 1990ஆம் ஆண்டு காலப் பகுதிக்குப் பின்னர் நகரப் பகுதிக்குள் யானையொன்று நுழைவது இதுவே முதல் தடவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ம-110)

## அரசியற்...

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், 17ஆவது வயதில் கைதுசெய்யப்பட்டு கடந்த 30 வருடங்களாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியற்கைதியான விக்னேஸ்வரநாதன் பார்த்தீபனின் தாயாரின்மூன்றாவது ஆண்டுநினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

இதை முன்னிட்டே, பார்த்தீபன் உள்ளிட்ட சகல தமிழ் அரசியற்கைதிகளும் விடுதலைபெற்றுக் குடும்பங்களுடன் இணைய வேண்டுமென்ற பிரார்த்தனையுடன்'விடுதலைப்பெருவிருட்சம்வேரூன்றித் தளைத்திட ஒரு குவளை நீர் உவந்து உறவுகளை விடுவிப்போம்!' எனும் கருப்பொருளில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(அ-ம-26-66-20)

## அரசாங்க...

ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வீழ்ச்சியடைந்திருந்த அரச திணைக்களங்களை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரச திணைக்களங்களுக்குள் வளப்பற்றாக் குறைகள் காணப்படுகின்றன. பிரதேச செயலாளர்கள் உட்பட ஒவ்வொரு துறையிலும் பணியாற்றுபவர்களுக்குத் தேவையான வாகனங்களை வழங்குவதற்கு எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் நிதியொதுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளுக்குப் பின்னர் அரச சேவைக்குப் புதிதாக 30 பேரைச் சேர்க்கத் திட்டமிட்டுள்ளதுடன், டிஜிற்றல்சேவையை வலுப்படுத்தவும்தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார்.

(அ-ம-இ)

## மரண...

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் ஜனாதிபதியாக இருந்தபோது நூறு நாள் வேலைத்திட்டம் ஒன்றைக் கொண்டுவந்தேன். இந்தத் திட்டத்தின் கீழ் ஏராளமான நன்மைகள் நாட்டுக்குச் செய்யப்பட்டன. எரிபொருள்களின் விலைகளும் குறைக்கப்பட்டன. ஆனால், இந்த அரசிடம் அப்படி எந்தவொரு திட்டமும் இல்லை. குறைந்தது மூன்று வருடங்களுக்கு என்ன செய்யப்போகிறோம் என்ற திட்டம் அரசிடம் இருக்கவேண்டும். அப்படியான திட்டங்கள் அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

போதைப்பொருள் வியாபாரிகள் 4 பேருக்கு மரண தண்டனை வழங்கியுள்ளேன். அப்போது பிரதமரும் எதிர்கட்சித் தலைவரும் அதை எதிர்த்தார்கள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. இந்த நாட்டில் மீண்டும் மரண தண்டனை அமுல்படுத்தப்படவேண்டும். கடுமையான தண்டனை இருந்தால் தான் குற்றங்கள் குறையும்.

இந்த அரசு செய்கின்ற நல்லது, கேட்டது பற்றி இப்போது அளவிட முடியாது. இந்த அரசு ஆட்சிக்கு வந்து எட்டு மாதங்கள் தான் ஆகின்றன. எட்டுமாதங்களுக்குள் அரசை அளவிடமுடியாது. ஆகக் குறைந்தது இரண்டு வருடங்களாவது கடக்க வேண்டும். அப்போதுதான் அரசைபற்றி சொல்லமுடியும் - என்றார்.

(அ-ம-75)

## வெளிநோயாளர்...

சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கலந்து கொண்டு புதிய வெளிநோயாளர் பிரிவுக் கட்டடத்தை திறந்து வைத்தார். கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.சிறீபவானந்தராஜா, வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், வடமாகாணப் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடமாகாணச் சுகாதார அமைச்சின் செயலர் திருமதி ப.ஜெயராணி, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன்பத்திரன, யாழ்ப்பாணம்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவகலாநிதி ஆ.கேதீஸ்வரன், ஊர்காவற்றுறை மற்றும் வேலணை சுகாதார மருத்துவ அதிகாரிகள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள், கடற்படையினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

திரு.திருமதி சிவப்பிரகாசம் வாசன் ஜெசிந்தா தம்பதியரின் திட்ட உருவாக்கத்தில், புலம்பெயர் தேசத்தில் வாழும் நயினாதீவு உறவுகள் மற்றும் ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்க வாறன்டோர்ப் கிளையின் நிதிப் பங்களிப்பில், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆகியவற்றின் அனுசரணையுடன் இலங்கைக் கடற்படையின் கட்டுமானத்தில் நயினாதீவு பிரதேச மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம் அமையப் பெற்றுள்ளது.

மேற்படி மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக்கான தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள் என்பன நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை, சுகாதாரத் திணைக்களம் மற்றும் நலன் விரும்பிகளால் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ-ம-26-66)

வீடு வாடகைக்கு
நல்லூர் கோவிலில் இருந்து 300 M தூரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு குறிகியகாலத்திற்கு (நாளாந்த அடிப்படையில்) வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 443 2989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டட வேலையாட்கள் தேவை

மேசன், தச்சுவேலை, வெல்டிங் வேலை, அலுமினியம் பிற்றிங்

தொடர்பு: 077 999 9020

## அண்ணா பொதிகள் சேவை

UK - 1,350/- 16+
France - 2,050/- 16+
Germany - 1,950/- 16+
Canada - 2,600/- 16+



தொடர்பு: 075 330 5500, 070 330 5500

## தேவை

நிகழ்வுகளின் போது புகைப்படம் எடுப்பதற்கு ஒருவர் தேவை (Personal Photographer)
போக்குவரத்து செலவு, கவர்ச்சிகரமான சம்பளம் என்பன வழங்கப்படும்.

Whatsapp:- 077 774 3185


## விபத்தில் ஒருவருக்கு காயங்கள்!

வடமராட்சி – மாலுசந்திப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மோட்டார்சைக் கிளும், சொகுசுக்காரும் மோதியே இந்த விபத்து சம்பவித்துள்ளது. (ம-100)


## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல நகைக்கடையொன்றிற்கு ஆண் வேலையாட்கள் தேவை

தொடர்புகளுக்கு: 076 076 2552

## மணமகள் தேவை

1987 இல் பிறந்த இந்து (V) நட்சத்திரம் - பூசம், கிரகபாவம் - 28, உயரம் - 5'7" உடைய நியூசிலாந்து வதிவிட விசாவைக் கொண்ட, பொறியியலாளராகத் தொழில்புரியும் (Civil Engineer) எவ்வித தீய பழக்கங்களும் அற்ற மகனுக்கு படித்த, அழகான, நற்குணம் உள்ள மணப்பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். சீதனம் பெரிதாக எதிர்பார்க்கவில்லை.

தொடர்புகளுக்கு: 070 646 3537, 021 222 8805

## TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

தொழில்நுட்பப் பிரிவு

A/L 2027

ஆரம்பம் : 14.07.2025 (திங்கட்கிழமை)
நேரம் : மாலை 3.15 மணி

A/L 2025, 2026 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு : 077 0175 346

## வீடு வாடகைக்கு

சுன்னாகத்தில் மின்சார நிலைய வீதி, கதிரமலை சிவன் கோயிலுக்கு முன்பாக புதிதாக அமைக்கப்பட்ட லக்சரி வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 794 7192

## வேலையாட்கள் தேவை

தென் மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஆண் வேலையாட்கள் தேவை.
சம்பளம் :- 50,000/-
உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்பு:- 077 480 3379

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் அதிகார செல்லமுத்து வீதியில் (சங்கரப்பிள்ளை வீதிக்கு அருகில்) 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- 1 பரப்பு - 55 லட்சம்
- விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 534 3697
Whats app: +140 547 61531


## பிரத்தியேக வகுப்புகள்

A/L க.பொ.த உயர்தரம்
பொருளியல், வணிகக்கல்வி, நாடகமும் அரங்கியலும்,
O/L க.பொ.த சாதாரணதரம்
வரலாறு, நாடகமும் அரங்கியலும், குடியியற் கல்வி
தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்

தொடர்புகளுக்கு:
077 906 4595
077 959 0360, 077 656 9911


## மரண அறிவித்தல்

தோற்றம் 05.12.1937 — மறைவு 06.07.2025



### யோகராஜா செல்லம்மா (பரமேஸ்வரி)

(யாழ் போதனா வைத்தியசாலை ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)

காங்கேசன்துறை சோதி வீதியை, பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட யோகராஜா செல்லம்மா அவர்கள் கடந்த (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சம்பந்தர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற யோகராஜா அவர்களின் பாசமிகு மனைவியும், பிறேமளா, சியாமளா, சசிமளா, குகன் (தமிழ்முரசம் பணியாளர்) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற பிறேம்குமார் மற்றும் யோகேந்திரன், ஜெயராஜா, கவிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், பிறேமினி, ஷாலினி, ஜோயல், ஜூடித், மயூரன், செந்தூரன், வஷ்னி, அனுஷ்கா, ஆண்ட்ரூ, அஞ்சலா, சோபனா, நித்திலன், சுவேதா, யோகராஜ், சுகந்தன், தர்சிகா, லக்சிகன், ஜேக்கப் ஹவுஸ், டாரியோ ஆகியோரின் அன்பு பேர்த்தியும், மெல்வின், மிலியன், ஜெய்டின், மிலியா, கிரேஸி, நூறா, மியா ஸோபி, லெயானா, ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2025) திங்கட்கிழமை நோர்வே நேரப்படி 09.00 - 11.00 மணிக்கு Alfaset Kapell எனும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு:
குகன் யோகராஜா (மகன்)
0047 900 10877

தகவல் :
வ.தவராஜா (சகோதரன்)

(CS 58845) E


## We are Hiring OPERATIONS COORDINATOR

Sumi Foundation (www.sumi.ngo) is providing free early childhood education to underprivileged children in Sri Lanka.

**Responsibilities**

- Develop and implement strategies aligned with the Sumi Foundation's vision
- Oversee daily operations and ensure curriculum adherence by teachers
- Oversee budget, expenses, and report to external auditors
- Maintain communication with internal and Canadian teams
- Address inquiries from government officials, teachers and parents
- Other duties as required

**Qualifications**

- 4+ years of experience in a similar role in a structured organization
- Proficiency in Microsoft Office (Outlook, Word, Excel) is required
- Accounting experience is an asset
- Fluency in English and Tamil (written and verbal) is required
- Strong attention to detail, time management, and organizational skills are required

**Location** : Jaffna Office (Beside Vembadi School)
**Monthly Salary** : Rs 80K+ (negotiable)



Sumi FOUNDATION
Established in 2010
www.Sumi.ngo

Send your PDF Resume (file name as your full name)
Email: hr@sumi.ngo
Subject Line: "Operations Coordinator"


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஆனி 29 ஞாயிற்றுக்கிழமை (13.07.2025) சிகரம் :147

நார்த்தொடுத்து ஈர்க்கிலென் நன்றாய்ந்து அடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்;
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால்.

— நாலடியார்



# செம்மணிக்கு நீதி?

நிலாந்தன்

‘அணையாவிளக்கு’ போராட்டம் மனித உரிமைகள் ஆணையாளரை செம்மணி வளைவுக்குக் கொண்டுவந்தது. போராட்டத்தின் கோரிக்கைகள் அடங்கிய பட்டயத்தை அவர் பெற்றுக்கொண்டார். அந்தக்கோரிக்கைகளில் முதலாவதாகக் காணப்படுவது, செம்மணி உட்பட மனிதப் புதைகுழிகளை அகழ்ந்து ஆராயும்பொழுது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் மேற்பார்வையையும் நிபுணத்துவ உதவியையும் கேட்டிருக்கிறது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடைய அலுவலகத்துக்குள் இயங்கும் ஓர் அலுவலகமானது இலங்கையை பொறுப்புக்கூறவைப்பதற்குத் தேவையான சான்றுக்களையும் சாட்சிகளையும் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக சேகரித்துவருகிறது. அந்த அலுவலகத்தின் மேற்பார்வையையும் நிபுணத்துவ உதவியையும் கேட்டிருப்பதன்மூலம் அணையாவிளக்குப் போராட்டமானது மனிதப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளுக்கு அனைத்துலகப் பொறிமுறையையும் நிபுணத்துவத்தையும் கோரி நிற்கின்றது. அதாவது, உள்நாட்டுப் பொறிமுறையை நம்பவில்லை என்று பொருள்.

ஐ.நா.வில் 2021ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி சுமார் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக அந்த அலுவலகம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்துக்குள் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதன் பெயர் “ஸ்ரீலங்காவை பொறுப்புக்கூற வைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம்” (OSLAP) இதன்படி சான்றுகளையும் சாட்சிகளையும் அவர்கள் சேகரித்துவருகிறார்கள். ஆனால் அந்த அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்குள் வருவதற்கு இன்றுவரை விசா வழங்கப்படவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடைய வருகைக்குப்பின் அந்த அலுவலகத்தைச் சேர்ந்தவர்களுக்கு விசா வழங்கப்படுமா ?

ஆனால் தன்னுடைய இலங்கை வருகையின் இறுதியில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஊடகங்கள் மத்தியில் ஆற்றிய உரையில் என்ன சொன்னார் தெரியுமா? “இறுதியிலும் இறுதியாக இது இலங்கை அரசின் பொறுப்பாகும், அத்தோடு, இந்த முன்னெடுப்பு இலங்கையின் தேசிய உடைமை என்பது முக்கியம். மேலும் இது சர்வதேச வழிமுறைகளால், உதவிகளால் பூர்த்திசெய்யப்படலாம்,” அதாவது அவருடைய உத்தியோகபூர்வ நிலைப்பாட்டில், அவர் உள்நாட்டுப் பொறிமுறையைப் பலப்படுத்துவது பற்றியே பேசுகிறார். அப்படியானால் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ஐ.நா.வில் இயங்கிவரும் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிக்கும் அந்த அலுவலகத்தின் பொருள் என்ன? அது உள்நாட்டுப் பொறிமுறையைப் பலப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒன்றா? ஆனால் அந்த அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் நாட்டுக்குள் வர விசா இல்லையே?

சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான அந்த அலுவலகத்தில் அடிப்படைப் பலவீனங்கள் உண்டு. இப்படி ஒரு பொறிமுறை உருவாக்கப்படவிருக்கிறது என்பதனை ஊகித்து 2021 ஆம் ஆண்டு ஜெனிவா கூட்டத்தொடரை முன்னிட்டு சிவில் சமூகங்கள் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளை ஒன்றிணைத்தன. மூன்று கூட்டங்களை தொடர்ச்சியாக நடத்தியதன் விளைவாக ஒரு கூட்டுக்கடிதம் 2021 ஜனவரி மாதம் ஐ.நா.வுக்கு எழுதப்பட்டது.

அந்தக் கடிதத்தில் இரண்டு முக்கியமான விடயங்கள் கேட்கப்பட்டன. ஒன்று, பொறுப்புக்கூறலை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடமிருந்து ஐ.நா. பொதுச்சபை எடுத்துக்கொள்ளவேண்டும். அதைப் பின்னர் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றங்களிடம் பாரப்படுத்தவேண்டும். இரண்டாவது கோரிக்கை, மேற்சொன்ன பொறிமுறையானது குறிப்பிட்ட காலஎல்லைக்குள் அதன் செயற்பாடுகளை முடிக்கும் விதத்தில் வினைத்திறன்மிக்கதாக இருக்கவேண்டும். அந்தப் பொறிமுறைக்குரிய செயற்படு காலத்தை 6 மாதங்கள் அல்லது ஒரு ஆண்டாகக் குறைக்கும்படி கஜேந்திரகுமார் வலியுறுத்தினார். அந்தக் கூட்டுக்கடிதம் அனுப்பப்பட்ட பின் தமிழரசுக் கட்சி அந்தக் கடிதத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அப்பொழுது குற்றஞ்சாட்டியது.

அந்தக்கூட்டத் தொடரின் முடிவில் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானம் 46/1 இன்படி ஒரு பொறிமுறை - அதுதான் மேற்படி அலுவலகம்(OSLAP)-உருவாக்கப்பட்டது. ஆனால் அது தமிழ்த் தரப்புக் கேட்டிருந்த ஒரு பொறிமுறை அல்ல. அதில் பின்வரும் அடிப்படைப் பலவீனங்கள் இருந்தன. முதலாவதாக, அது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடைய அலுவலகத்துக்கு உள்ளே இயங்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டம்தான். அதாவது கூட்டுக் கடிதத்தில் கேட்டதுபோல பொறுப்புக்கூறலை அவர்கள் மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டுபோகவில்லை. இரண்டாவது அதற்கு ஆறு மாத அல்லது ஒரு வருடகாலநிர்ணயம் செய்து அதன் நடவடிக்கைகள் வேகப்படுத்தப்படவில்லை. பதிலாக இன்றுவரை அது இயங்குகின்றது. இப்படித்தான் இருக்கிறது தமிழ் மக்கள் பிரதிநிதிகள் கூட்டாக முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு ஐ.நா.வின் பதில் வினை. அது தமிழ் மக்கள் கேட்டதைவிட, எதிர்பார்த்ததைவிட பலவீனமான ஒரு பொறிமுறை என்றபோதிலும் அந்தப்பொறிமுறையைச் சேர்ந்த அலுவலர்கள்கூட நாட்டுக்குள் வந்து சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் கடந்த நான்கு ஆண்டுகளாக இலங்கை அரசாங்கங்கள் விசா வழங்கவில்லை.

இப்படிப்பட்டதோர் அரசியல் மற்றும் ராஜதந்திரப் பின்னணிக்குள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் விதத்தில் வார்த்தைகளைப் பிரயோகிக்காமல் விட்டது, அவருடைய அலுவலகத்துக்குள் இயங்கும் அந்தப் பொறிமுறையை அவரே பலவீனப்படுத்துவதாக அமையுமா?

அது ஒரு பலவீனமான கட்டமைப்புத்தான். எனினும் அந்த அலுவலகமானது நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்குள்ள அனைத்துலகப் பரிமாணத்தை மேலும் பலப்படுத்தியிருக்கிறது. ஏனென்றால் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பது என்பது இப்பொழுது ஓர் அனைத்துலக நடைமுறையாக மாற்றப்பட்டிருக்கிறது. எனவே சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிக்கும் விடயத்தில் தமிழ்மக்கள் அனைத்துலக சமூகத்தின் ஆதரவைப் பெறுவதற்குத் தேவையான அனைத்துலக நிலைமைகள் இப்பொழுது ஒப்பீட்டளவில் பலமாக உள்ளன. மேலும் அந்த அலுவலகம் சேகரித்துவரும் சான்றுகள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில்தான் அண்மைய ஆண்டுகளில் அமெரிக்காவிலும் கனடாவிலும் பிரித்தானியாவிலும் குறிப்பிட்ட சில படைப் பிரதானிகளுக்கும் படை அலுவலர்களுக்கும் எதிராகப் பயணத்தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இங்கேயும் தமிழ்த் தரப்பு நோக்குநிலையில் இருந்து ஒரு கேள்வி உண்டு. அந்தப் படைப்பிரதானிகள் தாங்களாக அதைச் செய்யவில்லை அவர்களுக்கு உத்தரவிட்ட, அதற்கு வேண்டிய அரசியல் தீர்மானத்தை எடுத்த, அரசுக் கட்டமைப்பு உண்டு. அந்தக் கட்டமைப்பைக் குற்றஞ்சாட்டும் ஒரு நிலை இன்று வரை ஐ.நா.விலோ அல்லது மேற்கு நாடுகளின் ராஜதந்திர வட்டாரங்கள் மத்தியிலோ ஏற்படவில்லை. அதாவது இனப்படுகொலையைச் செய்தது ஓர் அரசுக் கட்டமைப்பு. இன அழிப்பு என்பது அந்த அரசுக் கட்டமைப்பின் கொள்கையாக இருந்தது என்ற அடிப்படையில் அந்த அரசுக் கட்டமைப்பைத்தான் விசாரிக்கவேண்டும். அதற்கு எதிராகத்தான் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று தமிழ்த் தரப்பு கேட்கின்றது. ஆனால் அப்படி ஒரு வளர்ச்சி ஐ.நா.விலும் ஏற்படவில்லை. மேற்கு நாடுகளின் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியிலும் ஏற்படவில்லை.

எனினும் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தில் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஒரு கட்டமைப்பு, தமிழ் மக்கள் கேட்டதை விடப் பலவீனமானது என்றபோதிலும் அனைத்துலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது ஒரு முன்

05

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஆனந்தி

# வனிதா

போரின் கவிதை 20

சுதந்திரப் போர் ஒன்றை அழிக்க
அயல்நாடு தோள் கொடுத்தது..
பழிக்குப்பழி தீர்த்துவைக்க
மனிதநேயமற்றவர்கள்
வேற்று நாட்டிலிருந்து
அனுப்பப்பட்டார்கள்.

எதிரியின் எதிரி எமனாக வந்தது
வாழ்வதற்கு பிடிப்பின்றிய காலம்
இளம் பிள்ளைகளின் பெற்றோர்
கதறித்துடித்தனர் ..பிள்ளைகளை
கண்ணில் படாமல் ஒளித்தனர்.

சிவந்த ஆகாயத்தில் சேற்றின் துளிகள்
எப்போதும் அலங்கோலமான வானம்
அமைதி குலைந்த தெருக்கள் ..
நாய்கள் குரைத்துச் செய்தி சொல்லும்
கதவுகளைப் பூட்டுங்கள்....
விளக்குகளை அணையுங்கள் .....
அமைதியைக் கிழிக்கும் நாய்களின் ஊளைகள்
ஓயும் வரை யாரும்
உணவுண்ணத் தயாரில்லை.

சப்பாத்துச் சத்தங்கள் நெஞ்சை நசிக்கும்
சீக்கியரின் கொண்டைமுடி உயிரைப் பிழியும்
கூலிக்கு வாங்கி வந்த வன்மம்
அவர்கள் கண்களில் சிவக்கும்.

பயங்களைத் தாங்கிக்கொண்டு
பறக்கும் பறவைகள்..வெருண்டபடியே
கத்தும் நாய்கள். ..வெறும் வயிற்றோடு
சோற்றுப் புருக்கைகளுக்காக
ஏங்கும் அவற்றின் குட்டிகள்.

தப்பிப்பதற்காக வழி சொல்லாத விடியல்கள்..
இறையருள் நீண்டகாலம் மௌனித்திருந்தது.
தினம் தினம் பதற்றத்தில் கழித்த இரவுகள்..
கைதுகள் கலவரங்கள் மீண்டும்
நெஞ்சு துடிக்க ஆரம்பிக்கிறது.

அன்றைய நாளின் விதி
பலம் கொண்டு விடிந்தது.
சத்தமிடும் நாய்களை அடக்கி
வேலிகள் தோறும்.. இராணுவம்
மனிதர்களைக் கொன்று தின்னும்
ஆக்ரோசம் அவர்கள் கண்களில்.
காலை விடிந்த வாழ்வு
முடிவதற்கான ஆரம்பமென்பதை
எந்தக்கடவுளும் எனக்கு உணர்த்தவில்லை.

சப்பாத்துகள் படலையை
வேகம் கொண்டு அடித்து விழுத்துகின்றன..
வீட்டுக்குள் ஒளிந்துகொள்கிறோம்..
கைக்குழந்தையை கையில் ஏந்தியபடி
கணவனின் கையை இறுகப் பற்றுகிறேன்.

வேலியின் இடைவெளிகள் ஆராயப்பட..
தேடுதல் காலம் தொடர்ந்திருக்க.
இராணுவம் வீட்டுக்குள் பிரவேசிக்கிறது
குழந்தையைக் கணவனிடம் கைமாற்றுகிறார்கள்
காமத்தின் தேவை அவர்கள் கண்களில் தெரிந்தது
அந்த காமுகர்கள் தங்கள் தேவையைத்
தீர்த்துக் கொள்ளத் தயாராகின்றனர்

கணவரின் கால்கள் கட்டப்படுகின்றன
குழந்தையை அறைக்குள் அடைக்கிறார்கள்.
இராமனின் தேசத்தின் உத்தமர்களாக...
உலகமெங்கும் புகழாரம் சூடப்பட்ட
கற்பின் அரசனின் பக்தர்கள்..
இராவண தேசத்தில் கற்பழிக்கிறார்கள்.

பயந்து ஒடுங்கி பாதுகாப்பற்றவளாய்
விளிம்பு நிலையில் நின்ற குடும்பப் பெண் மீது
தங்கள் காம எச்சிலைக்
கருணையின்றித் துப்புகிறார்கள்.

காமத்தின் பெருநெருப்பு
கர்ப்பப்பை நிறைத்து பொருமி
உப்பிப் பருக்கவைக்கிறது
வெடிக்கும் உணர்வு...

அந்த நொடி உயிர் போய்விட்டால்
போதும் என்றிருந்தது.

கணவன் கண்முன்னே காமுகர்கள்.
கையில் அகப்பட்ட ஏழைப்பெண்
கசங்கி கற்பிழந்து உடல் வருத்தி
உயிர் அழக் கிடக்கிறேன்.

செத்துவிட்டால் போதும் என்றது மனம்
சாவைத்தா என்றது இதயம்.
கத்திக்கொண்டிருக்கும் குழந்தையின்
இதயம் வெடித்துவிடுமெனும் பதற்றம்.
இந்தக் கொடூரச் சூழலில் காமப்பசி
தீர்க்கும் ராமனின் பிள்ளைகளை
யார் பழி தீர்ப்பார்?

பத்தினி தேவி சீதாவை
கற்பு கலையாமல் காப்பாற்றிய
இராவணணின் தேசத்தில்
பெண்களைக் காமப்பொருளாக
அனுபவித்த காடையர்களின் முகங்கள்
அசுரர்களின் வம்சமாகத் தெரிந்தன.
இவர்களின் தாய், தமக்கை, தங்கை
மனைவியெல்லாம் இது அறிவாரோ?

காமப்பசி தீர்ந்த காடையர்கள்
வயிற்றுப் பசிக்குக் கிடைத்ததை
எல்லாம் உண்கிறார்கள்.
கணவனைத் தாக்குகின்றார்கள்
விளங்காத மொழியில்
ஏதோ அசிங்கமாக பேசுகிறார்கள்
குழந்தையின் அழுகுரல் எம்
இருவரையும் மீட்கிறது.

விட்டுச் செல்கிறார்கள் ....
தெருவெல்லாம் சனக்கூட்டம்.
வீட்டுவாசலில் காவல் நிற்கிறார்கள்
எவரும் வந்துவிடமுடியாமல்
தடுக்கிறார்கள்.. புனிதமான வாழ்வை
அசிங்கப்படுத்திய இந்தியக் கூலிப்படை
நகர்ந்து செல்கிறது....

அடிவாங்கிய கணவர் குழந்தையை
தூக்கியபடி அலறுகிறார்.
கத்திக்கத்தி மயங்கிக்கிடந்த பிஞ்சின் நிலை
விவரிக்க முடியவில்லை.
என்நிலை கண்டு கதறித் துடிக்கிறார்.
மார்பில் அடித்துக்கொண்டு
அழுது புலம்புகிறார்.

எங்கள் ஊரில் துணைவர்கள் மனைவிமாரின்
தலையில்லா முண்டங்களைப் பார்த்தார்கள்
சிதைந்த உடல்களை எரித்தார்கள்
சீரழிந்த நிலையில் இருக்கும்
என் நிலை பார்த்தவர் கூரிய ஆயுத்தால்
நிலத்தைக் கீறி கோபத்தைத் தீர்த்தார்.

ஆடைகளைச் சரி செய்து குடிக்க நீர் தந்து
நிலை கொள்ளும் வரை பொறுத்திருந்து ..
அமைதி தந்து அணையப் போகும்
உயிரைப் பிடித்து நிறுத்தி அணைத்தார்.

இராவணனிடம் சிறைப்பட்ட
சீதையின் கற்பில் ஐயம் கொண்டு
ஒரு கர்ப்பிணியை காட்டில்
விட்டவன்தான் இராமன்..
அத்தேசத்து காமுகர் அழித்த
கற்பை 'போரின் வடு'
அதை மறந்துவிடு என்று
கையைத் தூக்கி நிமிர்த்தினார்.

கற்பு மட்டுமே பெண்ணின் பெருமை என
சொல்லி வளர்ந்த என் ஊர் எரிந்து போனது.
இந்திய இராணுவம்
வேட்டையாடிய என் ஊரை விட்டு
முப்பத்து எட்டு ஆண்டுகளுக்கு
முன் புறப்பட்டோம்
இந்தத் தேசமே வேண்டாம் என்ற மனதுடன்
எம் வாழ்வு மாறியது.
நான் நேசித்த தேசத்தை மீண்டும்
பார்க்க மனமில்லை..நாய்கள் குரைத்தால் ...
என் நினைவுகள் மீண்டால்?
நான் ஒருபோதும் வரமாட்டேன்.

என் இருப்பை இந்தப் போரின்
வடுவைச் சொல்வதற்கு காலம் கொடுத்தது.
தெருவெல்லாம் அலையவைத்த இந்தப்போர்
எங்கோ கொண்டுபோய் எம்மைக்
குடியிருத்தியிருக்கிறது!
கணவர் என்னும் கடவுள்
என் வாழ்வின் மிகுதிக் காலத்தை
மிக அழகாகப் பின்னி அழுக்கை சுத்தம் செய்து
ஒரு தேவதையாக என்னை
வாழவைத்திருக்கிறது.

எத்தனை வருடங்கள் இந்தக்
கொடூர நினைவை மறக்கமுடியாமல்
அவதிப்படுகிறேன்...
புற்றுநோய் மௌனமாக அழிக்கும்
இந்த இறுதிக்காலங்களில்..
வேண்டுகிறேன்.

வன்முறைகளால் நிந்திக்கப்பட்ட
பெண்களை உருவாக்கும்
இந்தப்போர் எங்கு இருந்தாலும்
நிறுத்துங்கள்!
என்னைப்போல இனி யாரும் மௌனமாக
கண்ணீர் விட வேண்டாம்.
ஒருவனுக்காக உயிர் காத்த என் கற்பைக்
களங்கப்படுத்திய
அந்த காமுகர்கள் தேசம்
என்றோ ஒரு நாள்......எரிந்து போகட்டும்!
சாட்சிகள் இல்லாக் குற்றங்கள்
சப்தமில்லாமல் தண்டனை பெறும்.
நானும் ஒரு நாள் அமைதி கொள்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்றவாரத் தொடர்ச்சி)

# செம்மணி: முடிவுறாப் புதைகுழிகளின் கதை

ஜெரா

## கொலைப் பயமுறுத்தல்

செம்மணியில் புதைகுழி இருப்பதாக நான் சாட்சியம் அளித்தால் எனது குடும்பம் கொலைசெய்யப்படும் என்று அச்சுறுத்தல் கடிதங்கள் வந்தன. அவற்றை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளேன். செம்மணி மற்றும் ஏனைய பகுதிகளில் உள்ள 10 மனிதப் புதைகுழி இடங்களை நான் அடையாளம் காட்டுவேன். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஏ.எம். பெரேரா ஐந்து இடங்களைக் காட்ட இருக்கின்றார். அதில் ஒன்றில் மட்டும் 25 முதல் 30 வரையான சடலங்கள் ஒன்றாகப் போடப்பட்டு புதைக்கப்பட்டுள்ளன. மற்றுமொரு கைதியான ஜெயதிலகவும் சில புதைகுழிகளைக் காட்டத் தயாராக இருக்கின்றார்.

என்னால் சடலங்கள் புதைக்கப்பட்ட மூன்று இடங்களைத் தற்சமயம் அடையாளங்காட்டமுடியாது என்று நினைக்கிறேன். இந்த சம்பவங்கள் நடந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. நான் வாக்குமூலம் அளித்து ஒரு வருடமாகிவிட்டது. ஆனால் அங்கிருந்து எலும்புகள் எடுக்கப்பட்டதாக அறிகிறேன். இதற்காகவே மண் மாதிரிகளை எடுக்குமாறு கோரினேன். படையினரையோ. நாட்டையோ காட்டிக்கொடுக்க நான் வாக்குமூலம் அளிக்கவில்லை. எனக்கு ஏற்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்கவும். சில இராணுவ அதிகாரிகளின் செயல்களை அம்பலப்படுத்தவுமே இந்த வாக்குமூலத்தை அளிக்கிறேன். எனக்கு இந்த நீதிமன்றத்தால் நீதி கிடைக்காமல் போனாலும் சர்வதேச நீதிமன்றம் மூலம் நீதி கிடைக்கும் என நினைக்கிறேன்."

*சோமரத்ன ராஜபக்ச*



சோமரத்ன ராஜபக்ச

## சாட்சியாளர்கள் பற்றி...

எப்போதும் அதிகாரத் தரப்பினரின் குற்றங்கள் கண்டுகொள்ளப்படுவதில்லை. அவர்களின் குற்றங்களைச் சுமக்க ஒரு தொகுதி தரப்பினர் தகுதி பெற்றவர்களாக இருக்கின்றனர். கிருஷாந்தி படுகொலையிலும் அதுவே நடந்தது.

கிருஷாந்தி வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற விடயம் தெரியவந்தவுடன் யார் தலையிலாவது அந்தக் குற்றத்தைக் கட்டிவிட வேண்டிய தேவை அப்போது அதிகாரத்திலிருந்தவர்களுக்கு எழுந்தது. அதில் முதலில் சிக்கியவர் சோமரத்ன ராஜபக்ச. அவரளித்த வாக்குமூலங்களில் தன்னை ஒரு கீழ்நிலை துருப்பினனாகவும், தமிழர்கள் படும் இன்னல்களைப் புரிந்துகொண்டவராகவும் வெளிப்படுத்தியிருக்கின்றார். அதிலிருக்கின்ற உண்மை, பொய்களுக்கு அப்பால் ஒரு சிங்களத் துருப்பினன், நடந்துமுடிந்த படுகொலையின் சாட்சியமாக மாறியிருந்தமை வரலாற்றில் குறிப்பிடவேண்டிய ஒன்று.





அதனால்தான் என்னவோ சோமரத்ன ராஜபக்ச ஏனைய துருப்பினர் போலல்லாமல் அதிக தண்டனையை அனுபவிக்கவேண்டிய நிலையை எதிர்கொண்டார். சோமரத்ன ராஜபக்ச கொடுத்த வாக்குமூலத்தின் பின்னர் அவர் எதிர்கொண்ட பாதிப்புகள் அதிகம். சிறைக்கூடத்துக்குள்ளேயே தாக்குதலுக்கு இலக்கானார். அவரது குடும்பம் துப்பாக்கி குறிகளுக்கு முன்னதாக நிறுத்தப்பட்டது. இவ்வளவு அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு சாட்சிசொன்னார் அந்தச் சிங்களவர். ஆனால் ஒரேயொரு சாட்சியத்தோடு அடக்கி வாசிக்கப் பழகிக் கொண்டார்.

இவருடன் சேர்ந்து மேலும் எட்டுப் படையினர் கைதாகியிருந்தனர். ஜெயசிங்க, பிரியதர்சன பெரேரா, அல்விஸ், முத்துபண்டா, ஜெயதிலக, இந்திரகுமார நிஸாந்த என்பவர்களே கைதுசெய்யப்பட்டிருந்தனர். இதில் இருவர் தப்பியோடியிருக்க அல்விஸ் மூளை மலேரியாக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு இறந்துபோனார். மிகுதியானவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. அத்தோடு கைதுசெய்யப்பட்டவர்கள் இனங்காட்டிய இராணுவ உயரதிகாரிகள் பின்னர் விசாரிக்கப்பட்டார்களா என்பதற்கான ஆதாரங்கள் மிகக் குறைவு. அதில் சம்பந்தப்பட்ட சில அதிகாரிகள் போரில் இறந்துவிட்டனர் என்றும் காயப்பட்டனர் என்றும் செய்திகள் வந்தன. பெரேரா, ஜெயசிங்க போன்றோர் ஏனைய இடங்களிலும் மனிதப்புதைகுழிகள் இருப்பதாக தெரிவித்திருந்தனர். அவர்களிடமும் இந்தப் படுகொலை தொடர்பிலான ஆதாரங்கள் இருந்தன.

ஆனால் அவர்களின் கதைகள் பெரியளவில் கவனத்தில் எடுக்கப்படவில்லை. சோமரத்ன ராஜபக்ச காட்டிய இடங்களும், அவர் கொடுத்த வாக்குமூலத்துக்கு அமைவாகவுமே புதைகுழிகள் தோண்டப்பட்டன. இங்கு கைதாகிய இராணுவத்தினர் அரியாலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே. இந்தப் பகுதியில் நடந்த காணாமல் போதல், கைதுகள் தொடர்பிலான ரகசியங்கள் மட்டுமே அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் ஏனைய பகுதிகளில் பரவலாக நடத்தப்பட்ட சட்டவிரோத கைதுகள், கடத்தல்கள், காணாமற்போதல்கள் பற்றிய தகவல்கள் அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஒருவர் கொடுத்த வாக்குமூலத்திலேயே இவ்வளவு தொகையானவர்கள் கொன்று புதைக்கப்பட்டிருக்கின்றனர் என்பது தெரியவந்தது என்றால் அந்தக் காலத்தில் பணியாற்றிய ஒவ்வொரு துருப்பினருக்கும் எத்தனை குழிகள் தெரிந்திருக்கும் அங்கு என்ன நடக்கின்றது என்று யாருக்கும் எதுவும் தெரியவில்லை.

இவர்களின் கைதுகளும் குற்ற ஒப்புதல்களும் இலங்கை இராணுவத்தின் மெய்வடிவத்தை வெளிச்சமிட அப்போது போதுமான செய்தியாக இருந்தது. ஆனாலும் வழமைபோலவே இலங்கையின் அரச தரப்பு இராணுவத்தின் குற்றங்களை உடனடியாக ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. கால நீடிப்பின் ஊடாக அநீதியை நிலைநாட்டலாம் என்ற அதீத நம்பிக்கையில் செயற்பட்டது. அது சாத்தியமும் ஆனது. 1996 ஆம் ஆண்டில் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்ட செம்மணி விவகாரம் 1999ஆம் ஆண்டின் நடுப் பகுதிவரை இழுபட்டது.

இந்த மனிதப் புதைகுழியில் கிட்டத்தட்ட 400 பேர் புதைக்கப்பட்டிருந்தனர் என்று குற்றமிழைத்தவர்கள் ஒப்புக்கொண்டனர். அந்தக் காலப்பகுதியில் யாழில் 600 பேருக்கும் அதிகமானோர் காணாமற்போயிருந்தனர். அவர்கள் அனைவருக்கும் என்ன நடந்தது என்பதை இன்றுவரை அறியமுடியவில்லை. சிலருக்கு இறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

மிகுதியான இளைஞர், யுவதிகளைத் தேடும் பணியை அவர்களின் பெற்றோர் இன்னமும் கைவிடவில்லை. இந்தக் கைதுகளுக்கும் காணாமற்போதல்களுக்கும் பின்னணியில் சொல்லப்படும் காரணம் புலிகள் அல்லது புலிகளுடன் தொடர்புபட்டவர்கள் என்பதே. ஆனால் காணாமற்போனவர்களில் பலர் வெறும் அப்பாவிகள் என்பதை ஊரும், உறவுகளும் அறிந்தே வைத்திருக்கின்றனர்.

1996 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்ட யாழ்ப்பாணத்தினுள் பெருமளவிலான விடுதலைப்புலிகள் ஊடுருவி விட்டனர் என்ற சந்தேகமே இளைஞர் கைதுகளுக்கு காரணமாக சொல்லப்பட்டது. இந்த சந்தேகம் பொய்யானதாக இருந்தபோதிலும் அந்த ஆண்டில் முல்லைத்தீவில் இழக்கப்பட்ட 1, 200 சிப்பாய்களின் உயிர்களுக்கு பதிலீடு யாழ்ப்பாணத்தில் சரிசெய்யப்பட்டது என்பது தமிழர்களுக்குத் தெரிந்தே இருந்தது.

யாழ்ப்பாணத்தை இழந்த புலிகள் உடனடியாக ஓர் இராணுவ வெற்றியை அடையமுயன்றனர். முல்லைத்தீவு இராணுவத்தளம் மீதான தாக்குதல் யாழ்ப்பாண இழப்பைச் சமன்செய்தது. அத்துடன் இராணுவத்தரப்பிற்கு ஆளணி மற்றும் படையப் பொருள்கள் ரீதியிலான பேரிழப்பையும் இந்தத் தாக்குதல் ஏற்படுத்தியது. அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் தனது வேட்டையை இராணுவம் ஆரம்பித்தது. இனப்படுகொலையை ஒத்த இந்த வகை பலியெடுப்பு யாழ்ப்பாணத்தில் நடந்துமுடிந்தது. அதன் விளைவே செம்மணி மனிதப் புதைகுழி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகளைத் தீர்த்து வலுவூட்ட உதவுமா அரங்கு?

## சிறுவருக்கான 'கொண்டாட்ட ஆற்றுகை'

க.ரதிதரன்

அண்மைக் காலங்களில் சமூகப் பிறழ்வான செயற்பாடுகள் அதிகரித்திருப்பதைப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். தினமும் தற்கொலைகளும், வீதி விபத்துகளும் அதிகம் நடைபெறுவதோடு போதைப் பயன்பாடு, சிறுவயதுத் திருமணம், விவாகரத்துகள், குடும்ப மற்றும் பொது வன்முறைகள், களவுகள், சமூக வலைத்தள அவதூறுகள் என்பன உதாரணங்களாகும். அத்தோடு அதிகாரத் துஷ்பிரயோகமும் பாரபட்சங்களும் ஊழலும் அதிகரித்துக் காணப்படுகின்றன. மேலும் பொதுவாக எம்மிடையே உணர்ச்சிச்சமநிலை மேம்படுத்தப்படவேண்டியுள்ளதையும் அவதானிக்கமுடிகிறது. ஒரு காலகட்டத்தில் காணப்பட்ட சமூகப் பொறுப்புணர்வும், கூட்டு மனப்பாங்கும், சேவை மனப்பாங்கும் குறைவடைந்துள்ளதை முற்காலங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கமுடிகிறது.

சமூகப் பண்பாட்டில் காணப்பட்ட எழுதப்படாத சட்டங்கள் ஊர்களில் முன்னர் பெருமளவில் நடைமுறையிலிருந்தன - "நாலுபேர் என்ன சொல்வார்கள்?" "பழிபாவத்திற்கு அஞ்சுதல்" போன்ற சுய ஒழுங்கிருந்தது. ஒரு காலத்தின் சமத்துவக் கோட்பாட்டுச் சிந்தனைகள் சமூகத்தை அரசியல் பொருளாதார நோக்குநிலைகளில் மேம்படுத்த முயன்றன. அப்போதும் ஒரு இலட்சியம் இருந்தது. அதேபோல தேசிய உணர்வு முக்கியமான இடத்தைப் பிடித்ததோடு கேட்கப் பார்க்க ஆட்களிருந்தனர். எல்லோரும் ஏதோ ஒரு வகையில் ஒரே நோக்குடன் இணைந்திருந்த காலமிருந்தது. ஆனால் இன்று சமூகத்திற்கென்ற ஒரு பொதுநோக்கு இல்லாமல் போனதோடு, நுகர்வுப் பண்பாடும், காசள்ளும் கொண்டாட்டங்களும் அதிகரித்துவருவதை அவதானிக்கலாம். எனினும் முன்னொரு காலகட்டத்தில் சாதிப்பிரச்சினைக்கும் காலனியத்துவத்திற்கு எதிராகவும், சமத்துவத்திற்காகவும் போராடியதோடு நிற்காமல் இன அடக்குமுறைகளிற்கு எதிராகவும் பல நாடக ஆற்றுகைகள் காலந்தோறும் தோற்றம் பெற்றன. இன்றும் பல நாடகக்காரர்கள் பழைய வாஞ்சையோடும் காணப்படுகின்றனர்.

உலகில் நாடகத்தை சமூகத்தின் பல்வேறு பிரச்சினைகளைப் பேசும் கருவியாகப் பயன்படுத்தியதோடு அரங்கென்பது நேரடியாக சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கும், சமூகத்தை வலுவூட்டும் ஒரு பெருஞ்சாதனமாகக் கொள்ளப்படுகிறது. இலங்கைத் தமிழ் அரங்கானது சமூக அரசியல் பிரச்சினைகளை மிகப் பொறுப்புடன் பேசி வந்திருக்கிறது. இன்றைய புதிய நாடக அணுகுமுறைகள் பல சமூகப் பிரச்சினைகளில் மாற்றங்களை ஏற்படுத்தமுடியும் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளன. எனினும் எந்தப்பிரச்சினையையும் தனித்து நின்று தீர்க்க முடியாது என்பது பல சமூகவியலாளர்களின் கருத்தாகும். எனவே ஒரு கூட்டான மற்றும் பல துறைகளின் வலையமைப்புடனேயே சரியான முறையில் தீர்க்கமுடியும் அல்லது மாற்றங்களை ஏற்படுத்தமுடியும். அரங்கின் உதவி தேவைப்படும் ஒவ்வொரு துறையினரும் நாடகத்தை பிரச்சினைகளைக் கையாளவும், தீர்வு வழிமுறைகளைக் கண்டறியவும் அதனை ஒரு சாதனமாகப் பயன்படுத்தினால் அதிக பலாபலன் கிடைக்கப்பெறும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள 'அரங்கச் செயற்பாட்டுக்குழு' (TAG)பலவழிகளில்நாடகம்ஊடாகசமூகப்பிரச்சினைகளை மக்களிற்கு இனங்காட்டவும், தீர்க்கும் வழிமுறைகளைக் கண்டறியவும், அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பங்களித்துள்ளது. 'பொங்குதமிழ்' போன்ற தேசிய இன விடுதலைக்கான அரங்கு, சட்டவிரோத மதுப்பாவனை, கல்வியியல் அரங்கு, பெண்கள் விடுதலை, ஆற்றுப்படுத்தல் அரங்கு மற்றும் சுகாதார விழிப்புணர்வு போன்ற செயற்பாடுகளிலும் கடந்த காலங் களில் பெருமளவில் உதவிவருகிறது. இந்தக் குழுவின் அரங்கச் செயற்பாடுகள் வெறுமனே மேற்கத்தைய அணுகுமுறைகளைக் காட்டிலும் எமது சமூகப் பண்பாட்டு நிலைமைகளிற்கேற்ப பொருத்தமான சொந்த முறைகளைக் கண்டறிந்து உருவாக்கி அதைப் பயன் படுத்தியே செயற்படுவது பாராட்டத்தக்கது.

அண்மைக்காலங்களில் இந்தக்குழுவானது ஆற்றுகையின்மூலம் யுத்தத்திற்கு பின்னரான மக்களுக்கு நம்பிக்கை கொடுத்தல், சிரிப்பூட்டல், புற்றுநோய் விழிப்புணர்வு செயற்பாடுகள், முதியோர் கலந்தாடலரங்கு, நுகர்வுப் பண்பாட்டின் பாதிப்புகளை இனங்காட்டல், பெண்களை வலுவூட்டும் செயற்பாடுகள் போன்றவற்றோடு சிறுவர் அரங்க ஆற்றுகைச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுவருகிறது.

அந்தவகையில் கோயிலாக்கண்டியில் 04.07.2025 அன்று நடைபெற்ற சிறுவர் அரங்க ஆற்றுகைக்கொண்டாட்டம் வழமையான நாடக அணுகுமுறைகளில் இருந்து வேறுபட்டிருந்தது. இன்று சிறுவர்களது சிறுபராயம் கல்வி என்ற போர்வையில் சிதைக்கப்பட்டு ஆக்கத் திறனும், ஆளுமையும் வளரவேண்டிய இடத்தில் வெறுமனே போட்டியையும் பொறாமையையும் வளர்க்கிறதா என்ற கேள்வி வருகிறது. இதைத் தீர்ப்பதற்கான மாற்று வழியாக இந்த ஆற்றுகை அமைந்திருந்தது. இந்தச் சிறுவர் அரங்கச் செயற்பாட்டில் சிறுவர்கள் மட்டுமல்ல பெரியவர்கள் உட்பட ஊரே மகிழ்ந்திருந்ததைக் காண முடிந்தது. இந்த ஆற்றுகையைப் பார்ப்பதற்காக வந்திருந்த வெளிநாட்டைச் சேர்ந்த சிலர் (அமெரிக்கா, இலண்டன், அவுஸ்ரேலியா, இந்தியா) ஒட்டுமொத்த ஆற்றுகையையும் பார்த்துவிட்டு ஆச்சரியப்பட்டனர்.

கிராமத்தின் பலரும் வந்து கூடினர். சிறுவர்களோடு விளையாட்டில் தொடங்கி, அது இசையாகி, பாடலாகி, ஆடலாகி, நாடகமாகி எல்லாம் சேர்ந்த ஒரு ஆற்றுகையாக இருந்தது. இந்த ஆற்றுகையில் நாடகமும் ஒரு கூறாக இருந்தது.

சுருங்கி அடங்கி இருந்த சிறுவர்கள் எல்லோரும் விரிந்து மலர்ந்து பூக்கள் போல பூத்துக் குலுங்கினர். மைதானம் எங்கும் ஆடிப்பாடினர், ஓடி விளையாடினர், கூடிவிளையாடினர்.

ஒவ்வொரு பிள்ளைகளாக ஆராய்ந்து, அவர்களிற்கு என்ன பிரச்சினை, அவர்களின் தேவையென்ன என்பதை பேசிக்கொண்டு; இருப்பதைக் காட்டிலும் ஒரு ஆற்றுகையே எல்லாவற்றையும் தீர்த்துவைத்ததை நேரில் காணமுடிந்தது. 1990 களில் கல்விப் பணிப்பாளராக இருந்த கந்தசாமி என்பவர் சிறுவர் நாடகங்களைப் பார்த்துவிட்டு "இது பிள்ளைகளுக்கு ஒரு ரொனிக்" என்று சொன்னதாக சிதம்பரநாதன் குறிப்பிட்டது ஞாபகம் வந்தது. பிள்ளைகள் ஓடியாடி விளையாடி மகிழ்ந்தாலே போதும் பின்னர் அவர்கள் தமது கடமைகளைச் செவ்வனே செய்யும் திறன் பெற்றுவிடுவர்.

சிறுவர் துறைசார்ந்த ஆராய்ச்சியாளர்கள், சமூகவியலாளர்கள், உளவியலாளர்கள் அந்த ஆற்றுகை நடந்த இடத்தின் சிறுவர்களைப் போய் சந்தித்தால் அவர்களுக்கு என்ன மாற்றங்கள் நடந்திருக்குமென்று தெரியவரும். அதனால்தான் அரங்கத்துறை மட்டுமல்ல வேறு துறைகளும் இணைந்து இவ்வாறான சமூகச்செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும்.


இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிடவேண்டும் , அதாவது அங்கு வந்த சிறுவர்களில் தரம் ஒன்பது, பத்து வகுப்புகளிற்கு மேற்பட்டவர்கள் எவருமில்லை. எல்லோரும் தனியார் கல்வி நிலையங்களிற்குச் சென்றுவிட்டனர். எனினும் வந்த சிறுவர்களிற்கு ஏற்பட்ட மாற்றங்கள் எதிர்கால வாழ்வில் கல்வியில், கலையில் செல்வாக்குச் செலுத்தும் என்பதோடு சிறுவர்களுக்கு ஒரு தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தும். சிறுவர்களை முக்கியத்துவப்படுத்தி அவர்களோடு பெரியவர்கள் இணைந்து அரங்கில் செயற்படுவது பிள்ளைகளின் மனநிலையை மாற்றும்.

இன்றுள்ள பெரியதொரு சமூகக் குறைபாடானது சிறுவர்களுக்கான பயனுள்ள பொழுதுபோக்குகள் இல்லாமலிருப்பதுதான். அவர்களும் பெரியவர்களுக்குரிய சினிமாப் படங்களைப் பார்த்தே திசைமாறுகின்றனர் மற்றும் சில சிறுவர்களுக்கு எந்தவித ஆரோக்கியமான பொழுதுபோக்கும் இல்லாமல் வெறும் கல்வியோடே காலம்கழிகிறது. வெளிநாடுகளில் சினிமா, நாடகம் என்பவை எந்த வயதினருக்கு உரியவை என்பது முன்னரே அறிவுறுத்தப்படும். இங்கு அப்படி நடைமுறைகள் காணப்படவில்லை. எனவே நாடகத்தின் பங்களிப்பு சிறுவர் உளவிருத்திக்கும் ஆளுமை வளர்ச்சிக்கும் கற்பனையாற்றலிற்கும் மிக முக்கியமாகும். கோயிலாக்கண்டியில் மிகச் சிறப்பான விடயமென்னவெனில், அங்குள்ள பெற்றோர் தமது பிள்ளைகளை இவ்வாறான நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும் பங்குகொள்வதற்கும் வாய்ப்பளித்தமையாகும். இதன்மூலம் பல வழிகளில் பிள்ளைகள் பயன்பெறுகிறார்கள் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். சிறுவர்களை வலுவூட்டுவதற்காக இந்த ஆற்றுகையில் பங்காற்றிய ஆற்றுவோர்களான விமலநாதன், கிரிதரன், இதயராஜ், ரதி ரீச்சர், சிதம்பர நாதன் என்போரும், நொறில் போன்ற சிறுவர்களும் தமது முழுமையான சக்தியைப் பிரயோகித்ததை நேரில் காண முடிந்தது. அங்கு பறை இசை வழங்கிய இளம் பெண்களின் துடிப்பான செயற்பாடுகள் பிள்ளைகளை கிளர்ந்தெழச் செய்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதன் ஆற்றுவோர்கள் நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டுத் தயார்ப்படுத்திச் சென்றாலும் ஆற்றுகை செய்யப்படும் இடத்திற்கும் சூழலுக்கும் அமைய எல்லாமே மாறுபட்டிருக்கும். இந்த ஆற்றுகை மேடையில் நிகழ்த்தப்படும் சிறுவர் நாடகங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. இந்த ஆற்றுகைக் கொண்டாட்டம் வீச்சுடன்கூடிய பயனுள்ள ஒன்றாகும்.

இங்கு 'குரங்கும் தொப்பி வியாபாரியும்' என்ற கதையை நிகழ்த்திக் காட்டினாலும் அது இரண்டாம் பட்சமாகவே இருந்தது. ஏனென்றால் அந்த அரங்கைக் காட்டிலும் அங்கு பல செயற்பாடுகள் கலந்த ஒரு ஆற்றுகைக் கொண்டாட்டமே மேலெழுந்தது. அங்கு நாடகம் என்பது கொண்டாட்ட ஆற்றுகையின் ஒரு மூலக்கூறாகவே இருந்தது. அரங்க விளையாட்டுகள், பாடல்கள், வேடமுகங்கள், சிறப்புற வடிவமைக்கப்பட்ட கூடையும் தொப்பிகளும் சிறப்புற அமைந்திருந்தன. இவற்றையெல்லாம் சிறப்புற ஒழுங்கமைத்த குழுவின் ஆற்றுகையாளர் சிவமணி பாராட்டிற்குரியவர். இவற்றை ஆதரித்து இடம்கொடுத்த கோயில் தலைவர் மற்றும் ஊரவர்க்கும் நன்றி சொல்லவேண்டும்.

இதன் இயக்குநர் கலாநிதி க. சிதம்பரநாதன் கூறினார் 'நாடகம் ஒரு விளையாட்டு' என்று . ஏனென்றால் அதை நடித்துக் காட்டுவதைக் காட்டிலும் விளையாடுவதுதான் முக்கியம். அந்த விளையாட்டுக் கொண்டாட்டத்தையும் ஆற்றுகையையும் உருவாக்குகிறது. பிள்ளைகளைப் படிப்படியாகப் பங்குபற்றும் உச்சநிலைக்குக் கொண்டுசெல்லவேண்டும். பிள்ளைகளுக்கும் ஆற்றுவோருக்கும் ஒரு நெருக்கமான உறவு ஏற்படவேண்டும். ஒன்றை ஏற்றுக் 'கொண்டு ஆடுதல்' அதுவே கொண்டாட்டம் அல்லது கொண்டாட்ட ஆற்றுகை. நாமும் பயனுள்ளதை, ஆரோக்கியமானதை கொண்டாடுவோம்.

இன்று ஒவ்வொரு அரச, தனியார், மற்றும் பொதுநலன் சார் துறையினர் எல்லோருமே சமூகத்தின் பிரச்சினைகளை இனங்காண்கிறார்கள். தீர்வுகளையும் தெரிந்திருக்கிறார்கள் ஆனால் அவற்றை எப்படித் தீர்ப்பது என்ற வழிமுறையில் தான் பொருத்தமான உபாயங்களை வேண்டிநிற்கின்றனர். எமது பகுதிகளில் பிரச்சினைகள் இனங்காணப்பட்ட அளவிற்குத் தீர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அரங்கச் செயற்பாட்டுக்குழுவின் 'சமுதாய அரங்கு' என்ற ஆற்றுகை வடிவம் பல பிரச்சினைகளை சமூகம் தாமாகவே தீர்க்கும் உபாயங்களைக் கொண்டுள்ளது. இந்த அரங்கு ஆற்றுவோர், பார்ப்போர் என்ற வேறுபாடின்றி எல்லோரும் பங்குகொள்ளவும் பேசவும் இடம்கொடுப்பதோடு சமூகத்தின் உள்முரண்பாடுகளைக் குறைத்து விழிப்புறவும் வழிசெய்கிறது.



# செம்மணிக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னேற்றம்தான். இப்படிப்பட்டதோர் பின்னணியில் தான்,செம்மணி உள்ளிட்ட எல்லா விடயங்களிலும் தமிழ்மக்கள் தமது சக்திக்கேற்ப சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் பொருத்தமான கட்டமைப்புகளை உருவாக்கவேண்டியுள்ளது.செம்மணி தொடர்பில் மட்டுமல்ல தமிழ் மக்களிடம் பெரும்பாலான விடயங்களில் விஞ்ஞானபூர்வமாகத் தொகுக்கப்பட்ட தரவுகள் உண்டா? தன்னைப் பலிக்கடா ஆக்கிய தனது உயர் அதிகாரிகளுக்கு எதிராக ஒரு இராணுவ சார்ஜன்ட் சொன்ன சாட்சியத்தை வைத்துத்தான் செம்மணியில் நானூறுக்கும் குறையாத உடல்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இந்த விடயத்தில் செம்மணியில் எத்தனை பேர் புதைக்கப்பட்டார்கள் என்பதனை அதற்குரிய துறைசார் நிபுணர்கள் கண்டுபிடிக்கட்டும். அதேசமயம்,செம்மணியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்ற அந்தப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தொடர்பான தரவுகளைத் திரட்டவேண்டியது தமிழ் மக்களுடைய பொறுப்பு.அவ்வாறான தரவுகளைத் திரட்டும் கட்டமைப்புகள் தமிழ் மக்கள் மத்தியில் எத்தனை உண்டு?

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து 16 ஆண்டுகளின் பின்னரும், மிகப் பலமான ஒரு புலம்பெயர்ந்த சமூகத்தைக் கொண்டிருந்த போதிலும், தமிழர்களால் ஏன் அவ்வாறான தரவுகளைத் திரட்டும் பொதுக் கட்டமைப்புகளை உருவாக்க முடியாதிருக்கிறது?குறைந்தபட்சம் டிஜிற்றல் பரப்பிலாவது அவ்வாறு ஒரு பொதுவான தகவல்திரட்டும் வேலையைத் தொடங்கலாம். இந்த விடயத்தில் அனைத்துலக அங்கீகாரத்தைப் பெற்ற மனித உரிமைகள் தகவல் பகுப்பாய்வு அமைப்பின் (Human Rights Data Analysis Group: HRDAG) நிபுணத்துவ உதவியைக் கேட்கலாம். இன அழிப்புக்கு எதிரான நீதியைக் கோரும் போராட்டம் என்று கடந்த பதினாறு ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். நீதிக்கான போராட்டத்தை எங்கேயிருந்து தொடங்கவேண்டும்? குற்றச்செயல்களை, குற்றவாளிகளை நிரூபிப்பதற்குத் தேவையான தகவல்களைத் திரட்டுவதில் இருந்துதான் அதைத் தொடங்கவேண்டும். அதற்குரிய கட்டமைப்புகள் எத்தனை தமிழ்மக்கள் மத்தியில் உண்டு ?

போர்க்காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அல்லது கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பான விடயங்களை இப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்கும் உறவினர்கள் கிராமங்கள் தோறும் உண்டு. அவ்வாறு உறவினர்கள் தந்த தகவல்களின் அடிப்படையில்தான் செம்மணிக்கு அருகே நாவற்குழியில் 1996ஆம் ஆண்டு ஒரு சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட 24தமிழர்களுக்கு நீதி கேட்டு வழக்குத் தொடுக்கப்பட்டது. அந்த வழக்கின் விளைவாகத்தான் அந்த வழக்கைத் தொடுத்த சட்டவாளர் கலாநிதி குருபரனுக்கு எதிராக நிர்ப்பந்தங்கள் பிரயோகிக்கப்பட்டு முடிவில் அவர் பல்கலைக்கழகத்தில் இருந்து நீங்கினார். நாட்டை விட்டும் சிறிது காலம் விலகியிருந்தார். இப்பொழுது அந்த வழக்கு ஒரு தென்னிலங்கைச் சட்டவாளரால் முன்னெடுக்கப்படுகின்றது. நிலைமாறுகால நீதியின்கீழ் உள்நாட்டு நீதியின் விரிவை பரிசோதிக்க முற்படும் வழக்குகளில் அதுவும் ஒன்று.

உள்நாட்டுப் பொறிமுறையே பொருத்தமானது என்று கூறும் அரசாங்கத்துக்கும் உள்நாட்டுப் பொறிமுறையை அனைத்துலக தராதரத்துக்கு பலப்படுத்தவேண்டும் என்று கூறும் ஐ.நா. அதிகாரிகளுக்கும் உள்நாட்டுப் பொறிமுறையின் இயலாமையை நிரூபிக்கத் தேவையான வழக்குகளைத் தமிழ் மக்கள் தொடுக்கலாம். கிருஷாந்தியின் விடயத்தில் அப்போது இருந்த அரசாங்கம் தான் நீதியாக நடந்து கொள்வதாகக் காட்டிக்கொள்ள முற்பட்டதன் விளைவாக,அதனால் தண்டிக்கப்பட்ட ஒரு படை ஆள் அரசுக்கு எதிராக வாக்குமூலம் வழங்கினார். அந்த வாக்குமூலம்தான் செம்மணியை வெளியே கொண்டு வந்தது. எனவே உள்நாட்டு நீதியின் விரிவைப் பரிசோதிப்பதற்கும் உள்நாட்டு நீதியின் போதாமைகளை உணர்த்துவதற்கும் வழக்குகளைத் தொடுப்பதற்கு சட்டச் செயற்பாட்டாளர்கள் முன்வரவேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் அதற்கு தேவையான எத்தனை சட்டச் செயற்பாட்டு அமைப்புகள் உண்டு?

தமிழ்ச் சட்டவாளர்கள் அரசியல்வாதிகளாக இருக்கிறார்கள். அரசியல் செயற்பாட்டாளர்களாக மனித உரிமைச் செயற்பாட்டாளர்களாக இருக்கிறார்கள். ஆனால் சட்டச் செயற்பாட்டு மையங்கள் என்று பார்த்தால் மிகக்குறைவு. கொழும்பை மையமாகக் கொண்ட சட்டவாளர் ரட்ணவேலும் அவருடைய அணியும் செம்மணியில் நிற்கிறார்கள். இந்த விவகாரத்தில் மட்டுமல்ல சரணடைந்தபின் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வழக்குகளையும் பெருமளவுக்கு ரட்ணவேல்தான் கையாண்டுவருகிறார். அவருடைய மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான மையம் தமிழ்மக்கள் மத்தியில் உள்ள போற்றுதலுக்குரிய சட்டச் செயற்பாட்டு அமைப்பாகும்.

அதனால்தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது,தமிழ்ப் பொது வேட்பாளரைத் தெரிவு செய்யும் சந்திப்பில் முதலில் பரிசீலிக்கப்பட்டது சட்டத்தரணி ரட்ணவேல்தான். ஆனால் அவர் அதற்கு மறுத்துவிட்டார். பொது வேட்பாளருக்காக உழைத்த மக்கள் அமைப்போடு சிவில்சமூக செயற்பாட்டாளராகிய சட்டத்தரணி புவிதரன் இணைந்து வேலை செய்தார். குருபரன் சில குறிப்பிட்ட உதவிகளைச் செய்தார். எனினும் தமிழ் மக்கள் மத்தியில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சட்ட உதவி மையங்கள், சட்டச் செயற்பாட்டு மையங்கள் எத்தனை உண்டு?

இத்தனைக்கும் நீதி கேட்டுப் போராடும் ஒரு மக்கள் கூட்டம். நீதிக்கான போராட்டம் என்பது குற்றம் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதில் இருந்துதான் தொடங்குகின்றது. அதற்கு வேண்டிய கட்டமைப்புகளை உருவாக்கவேண்டும். அதன்மூலம் முதற்கட்டமாக உள்நாட்டு நீதியின் விரிவை பரிசோதிப்பதற்கான வழக்குகளைத் தொடுக்கலாம். உள்நாட்டு நீதியின் போதாமை நிரூபிக்கப்படும்போது அனைத்துலக நீதிப் பொறிமுறைக்கான தேவை மேலும் நிரூபிக்கப்படும். அனைத்துலக அளவில் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஒரு அலுவலகம் அது பலவீனமானது என்ற போதிலும் ஓர் அனைத்துலக யதார்த்தமாக மாறியிருக்கிறது. அது தமிழ் மக்களுக்குப் பலமானது. தமிழ் மக்கள் நீதிக்காகப் போராடுகிறோம் என்று கூறிக் கொண்டு கற்பனையில் திளைக்காமல் கட்டமைப்பு சார்ந்து சிந்திக்கவேண்டும். முதலில் விஞ்ஞானபூர்வமாகத் தகவல்களைத் திரட்டும் தளங்களைத் திறக்க வேண்டும். இரண்டாவதாக, சட்டச் செயற்பாட்டு அமைப்புகளை உருவாக்க வேண்டும். தமிழ் மக்கள் கட்டமைப்புச் சார்ந்து சிந்திக்கவேண்டும். கட்டமைப்புகளை உருவாக்கவேண்டும். அதாவது தேசத்தைக் கட்டியெழுப்பத் தேவையான கட்டமைப்புகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.முபாறக்

# அறிந்தும் அறியாமலும்



## பிரேமதாஸவின் இங்கிலிஷ்

படித்தவர்கள் உயர் குலத்தவர்களுக்கு மட்டும்தான் அரசியல் சொந்தம் என்று இருந்த காலம் அது. அதை உடைத்துக்கொண்டு அரசியலுக்குள் நுழைந்து ஜனாதிபதிப் பதவி வரை உயர்ந்தவர்தான் ஆர்.பிரேமதாஸ. அமைச்சராவதற்கும் பிரதமராவதற்கும் ஜனாதிபதியாவதற்கும் ஆங்கிலம் முக்கியமானது என்று அறிந்த பிரேமதாஸ எப்படி ஆங்கிலத்தைக் கற்றார் தெரியுமா?

அவர் வாழ்ந்த குணசிங்கபுரப் பகுதியில் மூலைமுடுக்குகளில் உள்ள பிள்ளைகளுக்கு தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுத்துத்தான் அவர் ஆங்கில அறிவை வளர்த்துக்கொண்டார். கிணறுபோல் அது அள்ள அள்ள ஊறும். இதனால் அவர் முதன் முதலாக அமைச்சர் பதவிக்கு வரும்போதே ஆங்கிலத்தில் பேசக்கூடியவராக இருந்தார். அங்கிருந்து அவர் ஆங்கிலத்தை இன்னும் 'டெவலப்' செய்தது எப்படி தெரியுமா?

நிர்வாகப் பதவிகளுக்கு ஆங்கிலம் தெரிந்த தமிழர்களை நியமித்து அவர்களோடு தினமும் உரையாடுவதன்மூலம் ஆங்கிலத்தை சரளமாகக் கைவரப்பெற்றாராம் பிரேமதாஸ.



## இப்போதைக்கில்லை!

'இந்த வருடம் தேர்தல் வருடம் 'என்று அரசாங்கம் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் சொல்லியிருந்தது. அதாவது. உள்ளூராட்சிசபைத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல் எல்லாவற்றையும் இந்த வருடத்துக்குள் நடத்தி முடிப்பது என்பதுதான் அரசாங்கத்தின் திட்டமாக இருந்தது.

ஆனால், உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அடைந்த வீழ்ச்சி காரணமாக இறுதியாக உள்ள மாகாணசபைத் தேர்தலை இந்த வருடம் நடத்துவதில்லை என்று அரசாங்கம் தீர்மானித்துவிட்டது. அதாவது அடுத்த வருடம் நடுப்பகுதியில் நடத்துவதுதான் அரசின் இறுதியான முடிவு என்று அறியமுடிகிறது.

## சஜித்துக்கு சிக்கல்

323 கொள்கலன்கள் சோதிக்கப்படாமல் துறைமுகத்தில் இருந்து வெளியே அனுப்பப்பட்டமை தொடர்பிலான விசாரணை அறிக்கையை ஐக்கிய மக்கள் சக்தியின் முஜிபுர் ரஹ்மான் எம்.பி. சில நாள்களுக்கு முன் நாடாளுமன்றில் வெளியிட்டார் அல்லவா. இதனால் அவருக்கு எதிர்க்கட்சி எம்.பி.கள் மத்தியில் பலத்த வரவேற்பு. அரசாங்கம் மறைத்துவைத்திருந்த அறிக்கையை முஜிபுர் வெளியிட்டு, தேசிய மக்கள் சக்தியைச் சிக்கலில் தள்ளிவிட்டார் என்று எல்லோருக்கும் சந்தோசம். இது முடிந்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சபைக்கு வெளியே வந்து முஜிபுர் ரஹ்மானை சுற்றி பேசிக்கொண்டு நின்றனர். அப்போது அங்கும் இங்குமாக திரிந்த அரச எம்.பி.க்களை பார்த்தும் அவர்கள் நக்கலடித்தனர். "நல்ல வேலை இது. உங்களைப் போல பத்து பேர் இருந்தால் போதும். ஐக்கிய மக்கள் சக்தி எழுச்சியடையும்" என்று ஏனைய எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முஜிபுர் ரஹ்மானை வாழ்த்தினர்.

அப்போது அங்கு வந்துசேர்ந்த தயாசிறி ஜயசேகர எம்.பி "இதை அப்பிடியே விடக்கூடாது .சி.ஐ.டி., இலஞ்ச. ஊழல் ஆணைக்குழு என்று உரிய இடங்களில் முறைப்பாடும் செய்யவேண்டும்" என்றாராம். ரெலிபோன் கட்சிக்குள் அடுத்தகட்டத் தலைவர்கள் தலைதூக்குவது சஜித்துக்கும் கொஞ்சம் சிக்கல் தானாம்.



## பவர் 'ரில்வின்'!

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் என்ற பதவி ஒழுங்கு ஒன்று உள்ளபோதிலும் இந்த அரசாங்கத்தில் அது வித்தியாசமானது. முதலில் ஜனாதிபதி. அடுத்து ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா என்ற ஒழுங்குதான் உள்ளது. அதற்குச் சிறந்த உதாரணம்தான் இலங்கைக்கு எந்த வெளிநாட்டுத் தலைவர்கள் வந்தாலும் அவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துவிட்டு ரில்வினையும் சந்திக்காமல் போவதில்லை. அது மட்டுமா, ஜனாதிபதிக்கே சில முக்கியமான உத்தரவுகள் அவரிடமிருந்துதான் வருகிறதாம். அவ்வளவு 'பவர்' அவருக்கு.

## நான் அழகா இருக்கேனா ?

கடந்த வாரம் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கொழும்பு நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் விருந்துபசாரம் ஒன்றை ஏற்பாடுசெய்திருந்தார். பல அரசியல்வாதிகள் கட்சி பேதங்களுக்கு அப்பால் கலந்துகொண்டனர். அப்போது ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. காவிந்த ஜயவர்த்தன, அந்தக்கட்சியின் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார மற்றும் மொட்டுக் கட்சி செயலாளர் சாகர காரியவசம் ஆகிய மூவரும் ஒரு மேசையில் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தனர்.

அப்போது சாகரவின் அருகில் வந்த அமெரிக்கத் தூதுவர் அவரது காதில் ஏதோ கிசுகிசுத்துவிட்டுச் சென்றார். சாகரவும் சிரித்துக்கொண்டு ஏதோ சொன்னார். அவர் என்ன கேட்டார், இவர் என்ன சொன்னார் என்று தெரியவில்லை . இதை அவதானித்த சக அரசியல்வாதிகள். "என்னடாப்பா ..மேடம் என்னவோ ரகசியமா காதுக்குள்ள ஓதிட்டுப் போறா…என்ன விஷயம் ?"என்று கேட்டனர்.

"அதுவா.. அவர் அழகா இருக்கேனா என்று கேட்டார். நானும் ஓம் என்று சொன்னேன்.." என சாகர சிரித்துக்கொண்டு பதிலளித்தார் அந்த நண்பர்களுக்கு. அது பொய்யென்று தெரியும்.

அப்படியானால் ஜூலி என்னதான் கேட்டிருப்பார்,,?

தேடிப் பார்த்தால் இதுதான் 'மேட்டர்'.

இந்த நிகழ்வுக்கு முதல் நாள் ரஷ்யத் தூதுவர் மொட்டுக் கட்சி அலுவலகத்துக்கு சென்று நாமல் ராஜபக்ச, சாகர காரியவசம் ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

இந்தவிடயம் அமெரிக்கத் தூதுவரின் காதுகளுக்கு எப்படியோ சென்றுவிட்டது. அதைத்தான் இந்த நிகழ்வில் அவர் சாகரவிடம் கேட்டாராம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







க.றொபின்சன்
தரம் - 8
யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்



க. கபிலன்
தரம் 08
யா/நாவந்துறை றோ.க. வித்தியாலயம்



ர.சாணக்கியன்
தரம்6A
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி




ஆராதன்
தரம் 6f
யா/இந்துக் கல்லூரி.



ப.சுகிர்தன்
தரம் - 9B
யா/வரணி மத்திய கல்லூரி

## ஆமையார்

வீட்டைச் சுமந்து மெல்ல நடக்கும்
விந்தைகள் அற்ற ஆமையே உன்
ஓட்டுக்குள்ளே ஒளிந்துகொண்டு
உறங்குவதும் என்னவோ?


காட்டில் மேட்டில் புல்லைத் தின்று
பசியைப் போக்கும் ஆமையே உன்
கால்கள் நான்கும் தலையும்
நீட்டிக்கொண்டு நிற்பதேன்?

ஐம்புலனை அடக்கி வாழும்
அரிய கருத்தை ஆமையே உன்
வாழ்க்கைமூலம் புரிந்துகொள்ளும்
வழியைக் காட்டி நிற்கிறாய்?

த.சாருஜன்
தரம் - 5
யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயம்




க.கவில்ராஜ்
தரம் - 9
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்



யோ.ஷாய்சரன்
தரம் - 9C
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

### ஆங்கிலம் அறிவோம்

**Family**


- father
- mother
- brother
- sister
- son
- daughter
- grandfather
- grandmother

### மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




ம.யிரோஷ்
தரம் - 7
யா/வரணி மத்திய கல்லூரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊர்ப்புதினம்

பாகம் 3

○ இராகவன்

அப்ப நானொரு பகுதிநேர ஆங்கில ஆசிரியராகக் கரவெட்டி சிறிநாரதா வித்தியாலயத்தில படிப்பிச்சுக்கொண்டிருந்த காலம். மற்ற வாத்திமார் மாதிரி'பே'சீற்றில கையெழுத்துப்போட்டு மாதக்கடைசியில சம்பளமெடுக்கிற பாக்கியமெல்லாம் எனக்கில்லை. வேலை செய்த நாளுக்குத்தான் சம்பளம் வரும். ஒரு நாளுக்கு நூறு ரூபா. இருபது நாள் வேலை செய்தால் இரண்டாயிரம் வரும். அதுதான் என்ர ஆகக்கூடின சம்பளம். சனி, ஞாயிறு, பொது விடுமுறை, சொந்த விடுமுறைக்கெல்லாம் சம்பளம் வராது. அதால நான் அப்ப பெரிசாச் சொந்த லீவும் எடுக்கிறேல்லை. அப்பிடியிருந்தும் எனக்கு பதினெட்டு, பத்தொன்பது நாள்களுக்குத்தான் சம்பளம் வரும். சில நேரம் அதிர்ஷ்டவசமாக இருபத்தொண்டு இருபத்திரெண்டு நாள்களுக்குச் சம்பளம் வரும். அதுகும் ஆகக்குறைஞ்சது இரண்டு மணித்தியாலம் கட்டாயம் வேலை செய்திருக்கோணும். மாதம் முடிவில பள்ளிக்கூடத்தால வவுச்சர் செய்து நான் கையெழுத்து வைச்சு வலயத்திற்கு அனுப்பினால் அங்கயிருந்து எனக்கு செக் எழுதி அனுப்புவினம். பிறகு செக்கை மாத்தி காசாக்கவேணும். இதுதான் நடைமுறை. வுவுச்சர் எழுதுறதுக்கு வழமையாகப் பள்ளிக்கூடத்தில ஒரு கிளார்க் இருப்பார். ஆனால் நான் படிப்பிச்சது ஒரு குக்கிராமத்தில இருக்கிற சின்னப் பள்ளிக்கூடம் எண்டதால அங்கை கிளார்க் இல்லை. கிளார்க் வேலையெல்லாம் உதயா ரீச்சர்தான் செய்யிறது.

36

உதயா ரீச்சரை எனக்குச் சின்னனிலயிருந்து தெரியும். அவா எங்கட வீட்டுக்குப்பக்கத்திலதான் 1986 தொடங்கி 1989 வரை இருந்தவா. பின்னேரங்களில ஸ்கொலஷிப் வகுப்புகளும் நடத்திறவா. நிறையப்பொடியள் படிக்கவருவாங்கள். இன்னும் கொஞ்சம் விளக்கமாச் சொன்னால் ஊர்ப்புதினம் முதலாம் பாகம் முதலாவது அத்தியாயத்தில நான் குறிப்பிட்டிருந்த சிவன் என்கிற சிவனருள் வீட்டுக்கு அடுத்த வீட்டிலதான் உதயா ரீச்சர் குடும்பம் இருந்தது. அது அவையின்ர சொந்த வீடில்லை. அது சண்முகம்பிள்ளை எண்டாளின்ர வீடு. அவர் செனிற்றரி இன்ஸ்பெக்ரராயிருந்தவர் (சுகாதாரப்பரிசோதகர்) அதால எல்லாரும் அவரை செனிற்றரி சண்முகம்பிள்ளை எண்டுதான் சொல்லுவினம். அவர் வீட்டில நிக்கேக்குள்ள பெனியன்போட்டு அதுக்கு மேல சாரங் கட்டி உந்தமேளகாரர் கட்டுற பெல்ட்டும் கட்டியிருப்பார். நல்ல சிவலைத்தடியர். நரைச்ச மீசையோட நடிகர் ஜெமினி கணேசனின்ர சாயலிலையிருப்பார். அவருக்கு நாதன், நித்தி, சிறி எண்டு மூண்டு ஆம்பிளைப் பிள்ளையளும் பவா, துளசி, இறஞ்சோ எண்டு மூண்டு பெம்பிளைப்பிள்ளையளும் இருந்தவை.

எங்கட அம்மா அப்பாவோட செனிற்றரி சண்முகம்பிள்ளை குடும்பம் வலுநெருக்கம். அதால நானும் இளையண்ணாவும் பின்னேரங்கள்ள அங்க போறனாங்கள். பவாக்காவைப் பார்த்தால் நடிகை சரோஜாதேவி மாதிரியிருப்பா. அவவின்ர மனிசன்காரன் ராதா கிருஷ்ணன். நான் அவரை ராதா மாமா எண்டு கூப்பிடுவன். அவரும் என்னில வலு வாரப்பாடு. என்னைக் கண்டாக்காணும் மடியில தூக்கிவைச்சு "மருமேண்! மருமேண்!" எண்டு கொஞ்சுவார். எங்கடையூரில அவருக்கு மட்டும்தான் சுருள்தலை. அவரைப் பாத்தால் மீசையில்லா எம்.ஜி. ஆர். போல இருப்பார். ஒரு கறுப்புக் கண்ணாடியும் தொப்பியும் போட்டார் எண்டால் நான் புழுகேலை எண்டு நீங்கள் சொல்லுவியள். ராதா மாமாவின்ர சொந்த இடம் நயினாதீவு. அந்த நேரம் நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் தேருக்கு வடக்கயிறு வாங்கிக்கொடுத்தது ராதா மாமாதான் எண்டு எங்கட அப்பா எனக்கொரு நாள் சொன்னவர்.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org